Registered as a NewsPaper

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

விலை ரூபா : 8.00

பக்கங்கள்-12

நாதம் -16 திருவள்ளுவர் ஆண்டு- 2036 வைகாசி-19 02-06-2005 வியாழக்கிழமை ஓசை 104


கணேசா நகையகம்
தங்கநகை உலகில் தமக்கென தனியிடம் பதித்தவர்கள்
இல:123, பஜார் வீதி, வவுனியா.
T.P.-024-2222464
இல:194, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.-021-2225987
(சி-12120)

# ஓமந்தைப் பிள்ளையார் கோவிலில் புத்தர்சிலை

# புலிகள்-கண்காணிப்புக் குழுவிடம் கடும் ஆட்சேபம்



## அகற்ற நடவடிக்கையெடுப்பதாக படை அதிகாரிகள் தெரிவிப்பு

(செட்டிகுளம்)

**வவுனியா ஓமந்தைப் பகுதியில் வைக்கப்பட்டுள்ள புத்தர் சிலை பெரும் பரபரப்பினை ஏற்படுத்தியுள்ளது. இந்த புத்தர் சிலை தொடர்பாக வவுனியா மாவட்ட அரசியல் துறையினர் வவுனியா போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் கடும் ஆட்சேபம் தெரிவித்துள்ளனர்.**

நேற்று அப்பகுதிக்குச் சென்ற வன்னிப்பாராளுமன்ற உறுப்பினர்கள் இதுதொடர்பாக சிறிலங்கா இராணு வத்தினருடனும்,பொலிசாருடனும் பேச்சுக்களை நடத்தினர். இதை அடுத்து சிலையகற்ற பொலிசாரும் இராணுவத்தினரும் இணங்கி யிருப்பதாக வன்னி பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கல நாதன் தெரிவித்தார்.

ஓமந்தைப் பகுதியில் பாரம்பரி

(12ஆம் பக்கம் பார்க்க)

## அரசியல்துறை அலுவலகம் மீது அக்கரைப்பற்றில் கைக்குண்டு வீச்சு!

(மட்டக்களப்பு)

அம்பாறை மாவட்டம் அக்கரைப்பற்றிலுள்ள விடுதலைப்புலிகளின் மாவட்ட நிர்வாகத்துறை அலுவலகம் மீது நேற்று அதிகாலை 2.00 மணியளவில் இனந்தெரியாத நபர்களினால் கைக்குண்டு வீசுத்தாக்குதல் மேற்கொள் ளப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதலில் அலுவலகத்தின் முன்பக்க யன்னல்கள் மற்றும் கதவுகள் சேதமடைந்துள்ள போதிலும் அங்கிருந்தவர்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை.

இச்சம்பவத்தின்போது அலுவலகத்திற்குள் எட்டுப் போராளிகள் இருந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது. சிறிலங்கா விசேட அதிரடிப்படையின் கண்காணிப்பிற்குட்பட்ட பிரதேசத்திலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

## பொதுக்கட்டமைப்பு அமுலாக்கம் சனாதிபதியின் பேச்சளவிலுள்ளது

### - ஐ.தே.க குற்றச்சாட்டு

(கொழும்பு)

பொதுக்கட்டமைப்புத் தொடர் பாக அரசு வெறும் பேச்சளவிலேயே இருக்கின்றது என சிறிலங்காவின் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

கொழும்பில் ஊடகவியலாளர் களிடம் ஐக்கிய தேசியக் கட்சியின் செய்தித் தொடர்பாளர் பேராசிரியர் ஜி.எல் பீரிஸ் கூறியதாவது; கொழும் பில் புலனாய்வுத்துறை அதிகாரி முத்தலிப் சுட்டுக்கொல்லப்பட்டுள்ள சம்பவமானது இராணுவ அதிகாரிக ளுக்கு உரிய பாதுகாப்பு வழங்கப் படும் என்ற அரசின் உறுதிமொழி நிறைவேற்றப்படவில்லை என் பதையே எடுத்துக் காட்கிறது. இந்தப் படுகொலை மூலம் நாட்டின் பாது காப்பு அச்சுறுத்தலுக்குள்ளாகி யுள்ளது.

(12ஆம் பக்கம் பார்க்க)

## திருமலை புத்தர்சிலையை அப்புறப்படுத்த அரசுக்கு ஜூன்-15 வரை காலஅவகாசம்

### நேற்றைய சந்திப்பின் இறுதியில் முடிவு

(திருமலை)

திருகோணமலை நகரில் மத்திய பேருந்து நிலையம் அருகில் முச்சக் கர வண்டி தரிப்பு நிலையத்தில் மே 15 ஆம் திகதி இரவோடு இரவாக நிர்மாணிக்கப்பட்ட புத்தர்சிலையை அகற்றுவது தொடர்பாக ஹர்த்தால் நடவடிக்கை எதுவும் ஜூன் 15 வரை மேற்கொள்ளப்படமாட்டாது. அதே வேளை புத்தர்சிலையை அகற்றுவது தொடர்பாக நகர அபிவிருத்தி அதி காரசபை, புத்தர்சிலை நிறுவியவர் களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கும். இதனிடையில் புத்தர் சிலையை அகற்ற வேண்டும் என்று கோரி திருகோணமலை மாவட்டத் தமிழ்மக்கள் பேரவை நடத்திய ஹர்த்தாலை அடுத்து திருகோண மலை நகரில் குவிக்கப்பட்ட இராணு வத்தினரை அகற்றுதல் வேண்டும் என்ற கோரிக்கை தொடர்பாக சனா திபதி புதன்கிழமை மாலை திரு மலைக்கு வந்த அமைச்சர் மட்டக்

(12ஆம் பக்கம் பார்க்க)

## அனர்த்தம் நிகழ்ந்த பிரதேசங்களை கட்டியெழுப்ப நெகிழ்ச்சித்தன்மை தேவை!

### - உலக வங்கியின் இலங்கைக்கான பணிப்பாளர் வலியுறுத்து

(கொழும்பு)

சுனாமி கடல் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை கட்டியெழுப்புவதில் அரசின் நூறு மீற்றர் நிலைப்பாட்டில் நெகிழ்ச்சித்தன்மை கடைப் பிடிக்கப்படவேண்டும் என உலகவங்கியின் இலங் கைக்கான பணிப்பாளர் பீற்றர்ஹரோல்ட் கேட் டுள்ளார்.

தேசத்தை மீண்டும் கட்டியெழுப்புவதற்கான செயலணி கொழும்பில் நேற்று நடத்திய ஊடக விலாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு கருத்து ரைத்தார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில்;

கல்முனை மற்றும் வடக்குக் கிழக்கின் பாதிக்கப்பட்ட பலபகுதிகளில் காணிப்பற்றாக் குறை பாரியபிரச்சினையாகவுள்ளது. எனவே அரசின் நூறுமீற்றர் எல்லை தொடர்பான விடயத்தில் அரசு வளைந்து கொடுக்கவேண்டு மெனவும் இது குறித்து உலக வங்கியின் கொள்கை என்ன என்ற விடயத்தில் பிரச்

(12ஆம் பக்கம் பார்க்க)

## - புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குள் -

## படையினரின் சில பொருட்கள் தடை குறித்து போ. நி. க. குழு ஆலோசிக்கத் தீர்மானம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் சில பொருட்களை எடுத்துச் செல்வது தொடர்பாக இராணுத்தினரால் தற்போது விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகள் குறித்து போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு எதிர்வரும் செவ்வாய்க் கிழமை சிவில் மற்றும் இராணுவ அதிகாரி களுடன் ஆலோசனை நடத்தவுள்ளது. விடு தலைப் புலிகளின் கட்டுப்பாட்டிற்கு உட்பட்ட பகுதிகளுக்கு, சீமெந்து, இரும்புக் கம்பி, எரி பொருட்கள், தீப்பெட்டி, பற்றரி போன்ற பொருட் களை ஒருவர் எடுத்துச்செல்வது தடுக்கப்பட் டுள்ளது. குறிப்பிட்ட தொகைக்கு மேல் எடுத்துச் செல்வதென்றால் இராணுவத்தினர் அனுமதிக்க வேண்டும்.

போர் நிறுத்த உடன்படிக்கையில் இப் பொருட்களை எடுத்துச் செல்வது தொடர்பாக எவ்வித கட்டுப்பாடுகளும் இல்லாத போதிலும் இராணுவத்தினரால் அண்மைக் காலங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள இந்த நடை

(12ஆம் பக்கம் பார்க்க)

# இன்று தமிழீழ மாணவர் எழுச்சி நாள் உணர்வெழுச்சியுடன் கடைப்பிடிக்க ஏற்பாடு

(நமது நிருபர்)

தமிழீழ மாணவர் எழுச்சி நாள் இன்று தமிழர் தாயகத்தின் பல்வேறு பகுதிகளிலும் உணர்வெழுச்சியுடன் கடைப்பிடிக்கப்பட வுள்ளது.

இன்றையதினம் மாணவர்கள் ஆயிரக் கணக்கில் அணிதிரண்டு தமிழ்த் தேசியத்தை வலியுறுத்திக் குரல் கொடுக்கவுள்ளனர்.

இதற்காக யாழ்.குடாநாட்டிலுள்ள பாட சாலைகள்,பல்கலைக்கழகம், தொழிநுட்பக் கல்லூரிகள், கல்வி நிறுவனங்கள் பலவும் சிவப்புமஞ்சள் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டு எழுச்சிக் கோலம் பூண்டுள்ளன.

யாழ்.குடாநாட்டின் மாணவர் எழுச்சிநாள் விசேடநிகழ்வுகள் இன்று காலை 8.30மணிக்கு மாவீரன் சிவகுமாரனின் நினைவுத்தூபி அமைந் துள்ள உரும்பிராய்ச் சந்தைக்கு அருகில் இடம் பெறும்.

இதனைத் தொடர்ந்து சுமார் 9.30 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியிலிருந்து யாழ். இந்துக்கல்லூரிமைதானம் வரையிலான மாண வர் எழுச்சிப் பேரணியும், பொதுக்கூட்டமும் இடம்பெறும்.

இதில் பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் அணிதிரண்டு தமிழ்த்தேசியத்தை வலியுறுத்தி குரல் கொடுப்பர்.

தமிழீழ மாணவர் தின நிகழ்வை வவுனியா மாவட்டத்தில் இம்முறையும் சிறப்பாகக் கடைப் பிடிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக வவுனியா மாவட்டமாணவர் அமைப்பின் பொறுப்பாளர் சுபாஷ் தெரிவித்தார்.

வழமையாக மாணவர் எழுச்சிநாள் நிகழ்வு யூன் 05 ஆம் திகதி கொண்டாடப் படுகின்றபோதும் உயர் தரமாணவர்களின் பரீட்சை வருவதன் காரணமாக இம்முறை இன்று கொண்டாட ஏற்பாடுகள் செய்யப்பட் டுள்ளன..

வவுனியா இறம்பைக்குளம் தேவாலய முன்றலில் ஆரம்பமாகும் பேரணியானது

(12ஆம் பக்கம் பார்க்க)

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## பாதுகாப்புச்சேவைகளை வழங்குவதற்கான விலை மனு கோரல்

பாதுகாப்பு அமைச்சின் அனுமதியைப் பெற்றுள்ள பாதுகாப்பு சேவைகளை வழங்கக்கூடிய தனியார் நிறுவனங்கள் மற்றும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலிருந்து வட்டக்கச்சி விவசாயப்பண்ணைக்கு மாற்றலாகிச் செல்லும் விவசாயபீடத்திற்கு கீழே குறிப்பிட்டவாறு சேவைகளை வழங்குவதற்கு விலை மனுக்கள் கோரப்படுகின்றன.

(அ) காலை 6.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை
(ஆ) மாலை 6.00 மணி தொடக்கம் மறு நாள் காலை 6.00 மணி வரை.

தெரிவு செய்யப்பட்ட வழங்குனர் ஒரே தடவையில் ஆகக்குறைந்தது 10 பாதுகாப்பு சேவையாளர்களை வழங்கக் கூடியதாக இருத்தல் வேண்டும்.மேலும் பல்கலைக்கழகம் கோரும் திகதியிலிருந்து பணியைப் பொறுப்பேற்கத் தயாராகவும் இருத்தல் வேண்டும்.

கூறுவிலைப்படிவங்களை மீளளிக்கப்படாத வைப்புப்பணமாக ரூபா 250/= மட்டும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் காசாளர் கருமபீடத்தில் செலுத்தியதற்கான பற்றுச் சீட்டை சமர்ப்பித்து 30.06.2005 இற்கு முன்பதாக பிரதிப் பதிவாளர்/நிர்வாகம் அவர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

பூரணப்படுத்தப்பட்ட கேள்விப் பத்திரங்கள் சீல் பண்ணப்பட்டு வேலையின் பெயரை உறையின் இடதுமூலையில் குறிப்பிட்டு தலைவர், கேள்விச் சபை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் அவர்களுக்குக் கிடைக்கக் கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பப்படல் வேண்டும். அல்லது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பதிவாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியினுள் இடப்படல் வேண்டும்.

பூரணப்படுத்தப்பட்ட கேள்விப் பத்திரங்கள் 20.07.2005அன்று மாலை 3.00 மணிவரை ஏற்றுக் கொள்ளப்பட்டு உடனடியாக அன்று மாலை 3.30 மணிக்குத் திறக்கப்படும். கேள்விதாரர்களோ அல்லது அவர்களால் அங்கீகரிக்கப்பட்டவர்களோ கேள்விப்பத்திரங்களைத் திறக்கும்பொழுது பிரசன்னமாகியிருக்கமுடியும்.

தபால் பெட்டி இல.57,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
27.05.2005.

துணைவேந்தர்,
யாழ்.பல்கலைக்கழகம்.

(சி.12173)

# வரிவிளம்பரம்

## வீடு வாடகைக்கு விடப்படும்

இரண்டு மாடிக்கட்டடம் சகல வசதிகளுடன் வாடகைக்கு விடப் படவுள்ளது. தனியார். அரச, அரசசார் பற்ற நிறுவனங்களுக்கு வழங்கப் படும். தொடர்புகளுக்கு. திரு.விவே காநந்தராஜா, இல.1622, 2ஆம் வட்டாரம், இரத்தினபுரம், கிளிநொச்சி. (6225)

## தவறிவிட்டது

25.05.2005 அன்று பளை தடை முகாமில் பிறப்புச் சான்றிதழ், திரு மணப்பதிவுச் சான்றிதழ் அடங்கிய கறுப்பு பேக் தவறவிடப்பட்டுள்ளது. இதனைக் கண்டெடுத்தவர்கள் புதுக் குடியிருப்பு ஈழநாதம் பணி மனையில்,அல்லது கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் ஒப் படைக் குமாறுதயவாகக்கேட்டுக் கொள்கின் றோம். பிறப்புச் சான்றிதழ்:-கருணா கரன் நப்தரி யோன்சன், திருமணப் பதிவு:-கருணாகரன் மேரி. (6163)

## "சோஆ" நிறுவனத்தில் இயந்திரம்மூலம் கல்அரிவதற்குத் தொழிலாளர் தேவை

மேற்படி எமது நிறுவனம் சுனாமிப் பேரலையினால் பாதிப்புற்ற மக்களுக்கு உதவும் வகையில் பல திட்டங்களைச் செயற்படுத்தி வருகின்றது. அதன் நிமித்தம் கல் அரியும் வேலைகள் நடை பெற்று வருகின்றன. இதற்கான தொழிலாளர்கள்உடனடியாகத் தேவைப்படுகின்றனர்.விரும்பியோர் மேற்படிஎமது நிறுவனத்துடன் 09.06.2005 வியாழக்கிழமை காலை தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

- தொழில் நிரந்தரமானது.
- வேலை செய்யும் இடம்-இயக்கச்சி.
- சம்பளம்பேசித்தீர்மானிக்கப்படும்.
- எல்லா இடங்களில் உள்ளவர்களும் விண்ணப்பிக்கலாம்.
- ஒருவரோஅல்லது ஒரு குழுவாகவோ விண்ணப்பிக்கலாம்.

தொடர்புகளுக்கு:-

முகாமையாளர், "சோஆ"
நிறுவனம்,
கண்டிவீதி,
கிளிநொச்சி.

(சி.12171)

## பகுதிநேர கணனி தட்டெழுத்தாளர் பணிவேண்டுகை (தற்காலிகம்)

**பணிநேரம்:** மாலை 5மணி தொடக்கம் மாலை 9 மணிவரை

**பணிக்காலம்:** 01 வருடம்

இப்பணிநிலைக்கு தகுதியுடையவர்கள் தங்களது வரலாற்று சான்றுகள்,குடும்பஅட்டை என்பனவற்றுடன்10.06.2005 ஆம் திகதி சமுகம்தரவும். ஏனையவை பேசித்தீர்மானிக்கப்படும்.

ஆளணிப்பகுதி,
போக்குவரத்துக் கண்காணிப்புப்பிரிவு,
நடுவப்பணியகம், கிளிநொச்சி.

(சி.12172)

# மீள் கேள்வி அறிவித்தல்

## கல்விப்பணிப்பாளர், வலயக்கல்விப்பணிமனை, யாழ்ப்பாணம்.

01. இலங்கை ஜனநாயக சோஷலிசகுடியரசின் கல்விஅமைச்சின் நிதி ஒதுக்கீட்டிலிருந்து கீழ் குறிப்பிடப்பட்ட கட்டட வேலைகளைப் பூர்த்தி செய்யவலயக்கல்விப்பணிப்பாளரும் கேள்விச் சபைத் தலைவருமாகிய என்னால் கேள்வி அறிவித்தல் செய்யப்படுகிறது.

02. ஒப்பந்தகாரர் இக்ராட் (ICTAD) பதிவுப்புத்தகம் உள்ளவராகவும் இலங்கை தேசிய கட்டட ஒப்பந்தகாரர் சங்கத்தின் அங்கத்தவராகவும் இருக்கவேண்டும்.

03. கேள்விப்பத்திரங்கள் வழங்கல் 03.06.2005 ஆம்திகதியிலிருந்து 10.06.2005 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிவரை வழங்கப்படும். கேள்விகள் யாவும் எம்மால் 15.06.2005 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்பட்டு அன்றையதினம் எமது அலுவலகத்தில் முற்பகல் 10.30 மணிக்கு கேள்விப்பத்திரப் பெட்டி திறக்கப்படும்.

04. பாடசாலை அபிவிருத்திச் சங்கமும் கேள்விப்பத்திரங்களைப் பெறுவதற்கு விண்ணப்பிக்கலாம்.

05. கேள்விப்பத்திரங்களுக்கான மீளளிக்கக்கூடிய மற்றும் மீளளிக்கமுடியாத வைப்புப் பணங்களை யாழ்ப்பாண வலயக்கல்வி அலுவலகத்தில் செலுத்துவதன் பேரில் கேள்விப் பத்திரப் படிவங்களை யாழ். கல்விவலய பாடசாலை வேலைகள் பகுதியில் பெற்றுக்கொள்ளவும் மேலதிக தகவல் தேவைப்படின் இங்கு பெற்றுக்கொள்ளவும் முடியும்.

| பாடசாலையின் பெயரும் வேலையின் விபரமும். | மீளளிக்கமுடியாத வைப்புப்பணம் | மீளளிக்கக்கூடிய வைப்புப்பணம் | இக்ராட் இலக்கம் |
|---|---|---|---|
| யா/வண்.ஸ்ரீவைத்திலிங்கம்வித்-வண்ணார் பண்ணை கட்டட பெருந்திருத்தவேலை | 500/= | 6900/= | M9 |

06. கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொண்டவர்கள் எம்மால் வழங்கப்படும் இரண்டு கட்டட மதிப்பீட்டு அறிக்கைப் பத்திரங்களில் ஒன்று மூலப்பிரதியாகவும், மற்றையது பிரதியாகவும் கொள்ளவேண்டும்.

07. கேள்வியாளர் பூர்த்தி செய்யப்பட்ட மூலப்பிரதியையும் ஒப்பந்த ஆவணங்களையும் ஒரு கடித உறையிலும், மறு பிரதியை வேறு கடிதஉறையிலும் இடல்வேண்டும். இரண்டு கடித உறையும் வேறு பெரிய கடிதஉறையிலிட்டு, மேல் மூலையில் வேலையின் விபரமும் ஒப்பந்தகாரரின் இறப்பர் முத்திரையும் பொறிக்கப்பட்டு தலைவர்,கேள்விச்சபை, வலயக்கல்விப்பணிப்பாளர், கல்விப்பணிமனை, யாழ்ப்பாணம் என விலாசமிட்டு வலயக் கல்விப் பணிமனை யாழ்ப்பாண அலுவலகத்தில் வைக்கப் பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 15.06.2005 திகதி முற்பகல் 10.00 மணிக்கு முன் இடப்படவேண்டும்.

08. குறித்த நேரத்திற்கு பிந்திய கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

வலயக்கல்விப் பணிப்பாளர்,
வலயக்கல்வி அலுவலகம்,
யாழ்ப்பாணம்.

(சி.12176)

# கண்ணீர் அஞ்சலி

தோற்றம் 09 12 1959



மறைவு 31 05 2005

அமரர்.கிருஸ்ணபிள்ளை இராசலிங்கம்
(இரும்பு இராசன்)

31.05.2005 ஆம் நாளன்று அமரத்துவம் அடைந்ததையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்து நிற்கின்றோம். அன்னாரின் இழப்பினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவர்களது துயரங்களில் நாமும் பகிர்ந்து கொள்கின்றோம்.

பொறுப்பாளர்,பணியாளர்கள்,
வன்னியன் ஊர்திப்பகுதி,
கிளிநொச்சி.

(6227)

# ஆப்கானில் தற்கொலைத் தாக்குதல்; 20 பேர் உடல் சிதறிப்பலி; பலர் காயம்

(கந்தகார்)

**ஆப்கானிஸ்தானின் தென்பகுதியிலுள்ள கந்தகார் நகர பள்ளிவாசல் ஒன்றில் நிகழ்ந்த தற்கொலைத் தாக்குதலில் 20 பேர் வரை பலியாகியிருக்கலாம் என நம்பப்படுகின்றது பலியானவர்களில் காபூல் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மொகமட் அக்ரமும் அடங்குவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.**

கடந்த சனியன்று சுட்டுக் கொல்லப்பட்ட தலிபான் எதிர்ப்பு மதகுரு ஒருவரின் ஆன்ம சாந்தி பிரார்த்தனையில் ஈடுபட்டிருந்த சமயம் இந்தக் குண்டுவெடிப்புச் சம்பவம் நடைபெற்றுள்ளது.


சம்பவத்துக்கு யாரும் உரிமை கோரவில்லை சம்பவம் நேற்றுக் காலை ஒன்பது மணியளவில் மக்கள் வழிபாட்டில் ஈடுபட்டிருந்த வேளை நடைபெற்றது.

சம்பவத்தில் மேலும் பலர் பலியாகியிருக்கலாம் என அதிகாரிகள் கூறுகின்றனர். சாட்சியங்களின்படி பள்ளிவாசலின் உள்ளேயும், வெளியேயும் இரத்த வெள்ளம் காணப்படுவதாக ஏ.எப்.பி செய்தி தெரிவித்துள்ளது.

சம்பவம் தொடர்பாக விசாரிக்க ஆப்கான் சனாதிபதியின் ஆதரவாளரான மௌலவி அப்துல்லா பயாஸ் தலைமையில் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.



ஈராக்கின் பாகுபா நகரில் ரோந்து சென்ற இராணுவ வாகனம் மீது தீவிரவாதிகள் அதிரடித்தாக்குதல் நடத்தினார்கள். இதில் உருக்குலைந்த வாகனத்தைக் காணலாம். இந்தத் தாக்குதலில் இரண்டு பேர் பலியானார்கள். ஆறுபேர் காயமடைந்தனர்.



பாக்தாத் விமான நிலைய வீதியில் கார்க்குண்டுத் தாக்குதலில் எரிகின்ற வாகனங்களை ஈராக்கிய தீயணைப்புப்படையினர் அணைக்கின்றனர்.

# இருவேறு விமான விபத்துக்களில் இத்தாலிய, அமெரிக்கப்படையினர் பலி

(பாக்தாத்)

ஈராக்கில் விமானம் மணற்புயலில் சிக்கியதில் நான்கு அமெரிக்கர் உட்பட ஈரான் அதிகாரி ஒருவரும் பலியாகியுள்ளார்.

நேற்று முன்தினம் ஈராக் விமானப்படையைச் சேர்ந்த குட்டி விமானம் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டு இருந்தபோதே எதிர்பாராது வீசிய மணற்புயலில் சிக்கிய அந்த விமானம் விழுந்து நொருங்கியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அதில் பயணம் செய்த ஐந்து பேரும் கருகி உயிரிழந்தனர். இறந்தவர்களில் நான்கு பேர் அமெரிக்கர்கள்எனவும் அவர்களில் ஒருவர் இராணுவ அதிகாரி எனவும் இறந்த இன்னொருவர் ஈராக் இராணுவ அதிகாரி எனவும் தெரிவிக்கப்படுகிறது

கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் ஈராக் விமானப்படை புதுப்பிக்கப் பட்டதன் பின் நடந்த முதல்விபத்து இதுவெனக் கூறப் படுகிறது.

இதேவேளை ஈராக்கிலுள்ள நஸ்ரியநருவின் நகரில் இத்தாலிய இராணுவ உலங்குவானூர்தி விழுந்து நொருங்கியதில் அதில் பயணம் செய்த இராணுவத்தினர் நான்கு பேர் உயிரிழந்துள்ளனர்.



தேசிய ஒன்றுமைக்காக இஸ்லாமிய ஜிகாத் அமைப்பால் ஒழுங்குபடுத்தப்பட்ட அணிவகுப்பில் ஈடுபட்ட பலஸ்தீனியர்கள் இஸ்ரேலிய அமெரிக்கக்கொடிகளை எரிக்கின்றனர்.

# மூத்த அல் ஹைதா சந்தேக நபர் வழங்கிய ஓசாமா பற்றிய பயனுள்ள தகவல்கள்

பாகிஸ்தானில் கைது செய்யப்பட்ட மூத்த அல்ஹைதா சந்தேக நபரான அபூபறாச் அல்-லிபி ஓசாமா பின்லேடனைப் பற்றி சில பயனுள்ள தகவல்களை வெளியிட்டதைத் தொடர்ந்து அவர் அமெரிக்காவிற்கு நாடு கடத்தப் படவுள்ளார்.

பின்லேடனுடன் நேரடித் தொடர்புகளைக் கொண்டுள்ளவர் என நம்பப்படுகின்ற அபூபறாச் அல்-லிபி ஏற்கனவே பாகிஸ்தானைவிட்டு அமெரிக்காவுக்கு சென்றிருந்தார் என பாகிஸ்தான் சனாதிபதி முஷாரப் தெரிவித்தார். லிபியா நாட்டவரான இவர் ஏற்கனவே இரு தடவைகள் பாகிஸ்தான் சனாதிபதி முஷாரப்பைக் கொலை செய்ய முயற்சித்தவர் என சந்தேகிக்கப்பட்டவர் என்பதுடன் தற்போது அமெரிக்காவின் விசாரணைக்குட்படவுள்ளார். இவர் கடந்த இரண்டாம் திகதியன்று கராச்சியில் நடைபெற்ற துப்பாக்கிச் சண்டையின் போது கைது செய்யப்பட்டார்.

இது பற்றி முஷாரப் அமெரிக்காவின் ரி.என்.என் தொலைக்காட்சிக்குத் தெரிவிக்கையில், லிபி தற்போது பாகிஸ்தானின் விசாரணையிலுள்ளாரா இல்லையா என்பதை உறுதிப்படுத்தவில்லை. மூன்று நாட்களின் முன் கிடைத்த தகவலின்படி அவர் ஏற்கனவே கையளிக்கப்பட்டுவிட்டார் எனத் தெரிவித்தபோதும் லிபி இப்பொழுதும் பாகிஸ்தானில் தான் உள்ளார் எனத் தெரிவிக்கப் படுகிறது.

# எவரெஸ்ட் சிகரத்தில் ஏறி ஈரான் பெண்கள் சாதனை

(காத்மண்டு)

ஈரானைச் சேர்ந்த இரண்டு பெண்கள் எவரெஸ்ட் சிகரத்தில் ஏறி சாதனை புரிந்துள்ளனர். உலகின் மிக உயரமான எவரெஸ்ட் சிகரம் நேபாள நாட்டில் உள்ளது. 8850 மீற்றர் (29,035 அடி) உயரமுள்ள எவரெஸ்ட் சிகரத்தில் தற்போது ஈரான் நாட்டைச் சேர்ந்த இரண்டு பெண்கள் ஏறிச் சாதனை படைத்துள்ளனர். எவரெஸ்ட் சிகரத்தில் ஏறிச் சாதனை படைக்கும் முதல் முஸ்லிம் பெண்கள் இவர்கள்தான். கடந்த செவ்வாய்க்கிழமை இந்த சாதனையை அவர்கள் நிகழ்த்தினார்கள். நேபாளம் வழியாக இவர்கள் எவரெஸ்டில் ஏறிச் சாதனை படைத்தார்கள்.

எவரெஸ்ட் சிகரத்தில் நியூசிலாந்து, நேபாள நாடுகளைச் சேர்ந்த எட்மண்ட் ஹிலாரி, தென்சிங் நார்கே ஆகியோர் 1953 ஆம் ஆண்டு ஏறி சாதனை படைத்தனர். அவர்களைத் தொடர்ந்து இதுவரை 65 நாடுகளைச் சேர்ந்த 1600 பேர் எவரெஸ்டில் ஏறியுள்ளனர். இவர்களில் 102 பேர் பெண்கள். பெண்களில் ஜப்பானைச் சேர்ந்த ஜங்கோ தபெய் 1975 ஆம் ஆண்டு முதன்முறையாக ஏறி எவரெஸ்டில் ஏறிய முதல் பெண் என்ற சாதனையைப் படைத்தார். எவரெஸ்ட் சிகரத்தில் ஏறி சாதனை படைக்கச் சென்றவர்களில் ஏழு பெண்கள் உட்பட 187 பேர் தவறி விழுந்து உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



பாக்தாத் கார்க் குண்டுத் தாக்குதலில் காயமடைந்த ஒருவர் பாக்தாத் ஜமாக் மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

# சவுதி செல்லும் தொழிலாளர்களுக்கு ஒரு ஆண்டுக்கு மட்டுமே விசா பதிவுச் சட்டம்

(துபாய்)

சவுதிஅரேபியா செல்லும் தொழிலாளர்களுக்கு விசா ஒரு ஆண்டுக்கு மேல் நீடிக்கப்படமாட்டாது என சவுதி அரசு அறிவித்துள்ளது.

சவுதி அரேபியா உள்நாட்டினருக்குக் கூடுதல் வேலைவாய்ப்பை உருவாக்கவும், வெளிநாட்டுத் தொழிலாளர்களை நம்பியிருப்பதைக் குறைக்கவும் முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

இதனால் சவுதியில் இப்போது வேலை செய்துவரும் வெளிநாட்டுத் தொழிலாளர்களின் எண்ணிக்கையை பத்து ஆண்டுகளில் 20 சதவீதமாகக் குறைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

# ஜோர்ஜ்புஷ் சகோதரர் அதிபராக தந்தை விருப்பம்

அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் டபிள்யூ புஷ், தந்தை ஜோர்ஜ்புஷ் தனது இன்னொரு மகன் ஜெப்புஷ் அமெரிக்க அதிபராக வர வேண்டும் என விருப்பம் தெரிவித்துள்ளார்.

ஜெப்புஷ் தற்போது புளோரிடா கவர்ணராக இருக்கிறார். வருங்காலத்தில் அவர் அதிபர் தேர்தலில் போட்டியிட வேண்டும் என்று நான் விரும்புகிறேன். அதற்கான காலம் இதுவல்ல. வரும் 2008 ஆம் ஆண்டு நடக்கும் தேர்தலில் அவர் போட்டியிடமாட்டார். அதன்பிறகு அவர் போட்டியிடலாம்.இவ்வாறு அவர் கூறினார்.

புஷ் சின் மனைவி பார்பராவிடம் முன்னாள் அதிபர் கிளிங்டன் மனைவி 2008 ஆம் ஆண்டு அதிபர் தேர்தலில் போட்டியிடலாம் என்று கூறப்படுகிறதே என்று கேட்கப்பட்டது. அதற்குப் பதில் அளித்த பார்பரா "நான் ஹிலாரி கிளிங்டனுக்கு வாக்குப்போட மாட்டேன் ஏனெனில் அவரைவிட நான் சிறந்தவர்" என்று தெரிவித்தார்.

# ஜப்பானிய செஞ்சிலுவைச் சங்கத்தின் நிதியுதவியுடன்

# திருகோணமலையில் ஆயிரம் நிரந்தர வீடுகள்

(திருகோணமலை)

**திருகோணமலை மாவட்டத்தில் கடற்கோளினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் ஜப்பானிய செஞ்சிலுவைச் சங்கத்தின் நிதி உதவியுடன் சுமார் 1000 நிரந்தர வீடுகளைக் கட்டுவதற்கு இலங்கை செஞ்சிலுவைச் சங்கத் திருமலை மாவட்டக் கிளை நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது.**

தற்போது 245 வீடுகளை நிரந்தரமாக நிர்மாணிப்பதற்கான அங்கீகாரத்தை மட்டுமே திருகோணமலை மாவட்டச் செயலகம் வழங்கியுள்ளது. திருமலை நகரில் உயர்ந்தபாடு கடற்கரையில் அமைந்துள்ள சமுத்திரகம குடியிருப்பைச் சேர்ந்தமக்களுக்கு திருமலை கண்டி வீதியில் நான்காம், ஐந்தாம் மைல்களுக்கு இடைப்பட்ட காணியில் 145 வீடுகள் நிரந்தரமாக நிர்மாணித்துக் கொடுக்கப்படும் எனவும், கிண்ணியா பிரதேச செயலர் பிரிவில் 100 நிரந்தர வீடுகள் நிர்மாணிக்கப்படும் என்றும் செஞ்சிலுவைச் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. திருமலை மாவட்டச் செயலகத்தின் அங்கீகாரம் கிடைத்தவுடன் தெரிவு செய்யப்பட்ட ஏனைய இடங்களில் எஞ்சிய நிரந்தர வீடுகள் நிர்மாணித்துக் கொடுக்கப்படும் என்று சங்க வட்டாரங்கள் கூறின.



அளவுக்கதிகமான மக்களை ஏற்றிச் சென்ற பேருந்து தமிழீழ காவல்துறையினரால் சட்ட நடவடிக்கைக்குள்ளாக்கப்பட்டுள்ளதை படத்தில் காணலாம். (படம்:- சோதி)

# பல மில்லியன் அமெரிக்க டொலர்; வவுனியாவில் பொலிசாரால் கைப்பற்றல்!

(வவுனியா செய்தியாளர்)

வவுனியா வைரவப் புளியங்குளத்தில் உள்ள வீடு ஒன்றில் இருந்து பல மில்லியன் அமெரிக்க டொலர் பொலிசாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

கொழும்பில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட ஒருவர் பொலிசாருக்கு கொடுத்த தகவலின் அடிப்படையில் கொழும்பில் இருந்து வவுனியாவிற்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை வருகை தந்த பொலிசார் வைரவப் புளியங்குளத்தில் உள்ள இளைப்பாறிய கிராம சேவை அலுவலர் ஒருவரின் வீட்டைச் சோதனையிட்டபோதே பல மில்லியன் அமெரிக்க டொலர் நோட்டுக்கள் கைப்பற்றப்பட்டன.

இச்சம்பவம் தொடர்பாக வீட்டு உரிமையாளரும், இப்பணத்தினை வெளிநாட்டில் இருந்து கொண்டு வந்து இவ்வீட்டில் வைத்த நைஜீரிய பிரஜை ஒருவரும் பொலிசாரால் கைது செய்யப்பட்டு விசாரணைக்காக கொழும் பிற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.(10)



கடந்த 28 ஆம் திகதி சம்மளங்குளத்தில் நடைபெற்ற வீரமுரசு நிகழ்வில் மாவீரர் பெற்றோர்களையும், பிரதிநிதிகளையும் சம்மளங்குள சிறார்கள் வரவேற்பு நடனமாடி வரவேற்பதை காணலாம். (05)

## கண்டெடுப்பு

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி பாரதிபுரத்தைச் சேர்ந்த முருகன் ரூபவந்தினி என்பவருடைய தேசிய அடையாள அட்டை இல.865722788V, ஊர்காவற்துறையைச் சேர்ந்த ஆறுமுகம் சுதர்சனா என்பவரது தேசிய அடையாள அட்டை இல. 805854189V மற்றும் பயண அனுமதி அட்டை என்பன கண்டெடுக்கப்பட்டு கிளிநொச்சி ஈழநாதம் விளம்பரப் பணிமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரிமையாளர்கள் அலுவலக நேரத்தில் சமுகம் கொடுத்து பெற்றுக்கொள்ளவும். (சோ)

## தங்கச் சங்கிலி கண்டெடுப்பு

(முல்லைத்தீவு)

புதுக்குடியிருப்பில் இயங்கும் பாண்டியன் சுவையூற்றில் தங்கச் சங்கிலி ஒன்று கண்டெடுக்கப்பட்டு பொறுப்பாளரிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது.

அதற்குரியவர்கள் ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ளலாம் என பாண்டியன் சுவையூற்று புதுக்குடியிருப்புப் பொறுப்பாளர் தெரிவித்துள்ளார். (20)

# சோழர் சிறுவர் பூங்காவின் 12 ஆம் ஆண்டுநிறைவு விழாவும் மெய்வன்மைத் திறனாய்வு நிகழ்வும்

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் நிர்வாக அனுசரணையின் கீழ் ஊரக வளர்ச்சிப் பணியினரால் பராமரிக்கப்பட்டு வரும் இளங்கோபுரம் விசுவமடுவில் அமையப்பெற்றுள்ள சோழர் சிறுவர் பூங்காவின் 12 ஆம் ஆண்டு நிறைவு விழாவும் சிறார்களின் மெய்வன்மைத் திறனாய்வு நிகழ்வும் கடந்த திங்கட்கிழமை இடம் பெற்றது. பிற்பகல் 2.30 மணியளவில் சிறார்களின் "பாண்ட் வாத்திய" அணிவகுப்புடன் பூங்கா நிர்வாகி திருமதி இசைஞானவதி அருந்தவநாதனின் தலைமையில் ஆரம்பமானது.

ஜேர்மன் தமிழர் புனர்வாழ்வுக் கழக நிதிப்பங்களிப்புடன் பராமரிக்கப்பட்டு வரும் சோழர் சிறுவர் பூங்காவின் நிகழ்வில் மங்கல விளக்கினை வரைபடப்பிரிவுப் பொறுப்பாளர் புவியரசன் மாஸ்ரர், தேராவில் தமிழ் வித்தியாலய அதிபர் விக்கினேஸ்வரன், இளங்கோபுரம் கிராம அலுவலர் மாசிலாமணி ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

தமிழீழத் தேசியக் கொடியினை தமிழீழ அரசியல்துறைதுணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் ஏற்றி வைத்தார். அகவணக்கத்தைத் தொடர்ந்து தமிழர் புனர்வாழ்வுக் கழகக் கொடியினை தாய்-சேய் போசாக்கு நிலையங்களின் பணிப்பாளர் அதியமான், சிறுவர்கல்வி ஊட்டமேம்பாட்டுப்பணிக் கொடியினை தமிழீழ ஊரக வளர்ச்சிப் பணிப் பொறுப்பாளரும், சிறுவர் பூங்காக்களின் பணிப்பாளருமான பொ.கந்தன், முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டுக் கொடியினை விசுவமடு பிரதேச முன்பள்ளிகளின் இணைப்பாளர் லக்ஷ்மன், சோழர் சிறுவர் பூங்காக் கொடியினை பூங்காப் பெற்றோர் சங்கத் தலைவர் பெ.மாடசாமி ஆகியோர் ஏற்றி வைத்ததைத் தொடர்ந்து விளையாட்டுச் சுடரினை ஜேர்மன் தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணிப்பாளர் கி.சண்முகரத்தினம் ஏற்றிவைத்தார்.

ஆசியுரையினை தமிழீழ அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் வழங்கியதைத் தொடர்ந்து வரவேற்புரையினை பூங்கா பெற்றோர் சங்கத்தலைவர் பெ.மாடசாமி நிகழ்த்தினார்.

சிறார்களின் விளையாட்டு நிகழ்வுகளும், இசையும் அசைவும் போன்ற நிகழ்வுகள் வெகுசிறப்பாக நிறைவு பெற்றதைத் தொடர்ந்து சிறார்களுக்கு பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டன. இதனையடுத்து நன்றியுரையினை பெற்றோர் சங்கச் செயலாளர் திருமதி சுதர்சினி நிகழ்த்தினார்.

# திருமலைக் கடலில் மீன்பிடிக்கச் சென்ற இரு மீனவர்களை காணவில்லை

(திருகோணமலை)

திருகோணமலைக் கடலில் மீன்பிடிக்கச் சென்ற இரு மீனவர்களைக் காணவில்லை. இச்சம்பவம் தொடர்பாக திருகோணமலைப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இரண்டு பிள்ளைகளின் தந்தையான உபாலி (வயது 42) மற்றும் சஞ்ஜீவ என்பவர்களே காணாமற்போனவர்கள் என்று முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் அவர்கள் மீன்பிடிக்கச் சென்ற படகை பள்ளத்தோட்டம் பகுதி மீனவர்கள் கடலில் மூழ்கிய நிலையில் கண்டனர். பின்னர் அதனை மீட்டு கரைக்குக் கொண்டு வந்தனர் என்று படகின் உரிமையாளரான ஹேவவிதாரண பொலிசாருக்கு அளித்த வாக்கு மூலத்தில் தெரிவித்தார். மீன்பிடிக் கூட்டுறவுச் சங்கங்கள் கடைப்பிடித்து வரும் பொதுவிதியின்படி கடலில் அனர்த்தத்திற்குள்ளாகும் படகுகளை சக மீனவர்கள் கண்டால் உடனே அவற்றைக் கரைக்குக் கொண்டு வந்து சேர்க்க வேண்டும். அதன் படியே கடலில் மூழ்கிய நிலையில் காணப்பட்ட படகை மீட்டு வந்ததாக படகைக் கரைக்கு கொண்டு வந்த மீனவர்கள் கூறியதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. காணாமற் போன மீனவர்களைக் கண்டு பிடிப்பதற்கான தேடுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன-.

# நிகொட் அமைப்பால் வடக்குகிழக்கு மாகாணசபைக்கு அம்பியூலன்ஸ் வண்டிகள் கையளிப்பு

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் செயற்படும் நிகொட் அமைப்பு, கார்ப்செயற்றிட்டத்தின் கீழ் 30.06 மில்லியன் ரூபா பெறுமதியான ஒன்பது அம்பியூலன்ஸ் வண்டிகளை வடக்கு கிழக்கு மாகாண சபைக்கு வழங்கியுள்ளது.

நிகொட் திட்டப்பணிப்பாளர் ரி.லங்காநேசன் கடந்த திங்கள் பகல் பிரதம செயலாளர் செயலக வளவில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம செயலாளர் எஸ்.ரங்கராஜாவிடம் உத்தியோகபூர்வமாக இவற்றைக்கையளித்தார். பிரதம செயலாளர் ரங்கராஜா, அம்பியூலன்ஸ் வண்டிகளுக்கான ஆவணங்களை மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் சிறிவர்த்தனாவிடம் ஒப்படைத்தார். மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் ரி.சிறிவர்த்தனா வாகனங்களின் திறப்புகளை சாரதிகளிடம் வழங்கினார். ஒன்பது அம்பியூலன்ஸ் வண்டிகளும் கிளிநொச்சி, பளை, முருங்கன், முல்லைத்தீவு ஆகிய மாவட்ட வைத்தியசாலைகளுக்கும் கிளிவெட்டி, ஈச்சிலம்பற்று ஆகிய இடங்களில் உள்ள கிராமிய வைத்தியசாலைகளுக்கும், பூநகரி, மல்லாவி, விடத்தல்தீவு ஆகிய இடங்களில் உள்ள ஆரம்பசுகாதார நிலையங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன. கையளிப்பு நிகழ்வில், நிகொட் திட்டப்பணிப்பாளர் என்.புலேந்திரன், நிகொட் திருமலை மாவட்ட திட்டப்பணிப்பாளர் ஆர்.உமாகாந்தன் ஆகியோரும் பங்குபற்றினர்.





கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலகத்திற்கென பல இலட்சம் ரூபா செலவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள புதிய கட்டடம் பல மாதகாலமாக திறந்து வைக்கப்படாதுள்ளதனையும் இதன் காரணமாக தற் போதும் பலத்த சிரமங்களுக்கு மத்தியில் பிரதேச செயலக அலுவல்கள் தற்காலிக கொட்டகைகளில் இடம்பெற்று வருவதனையும் படங்களில் காணலாம்.

## சுற்றாடல் தினம்-ஜூன்-05

**இயற்கை வளமே இன்பத்தின் நிறைவு!**

**இயற்கையை அழித்தால் துன்பம் பெருகும்!!**

# எமது உரிமைக் குரலைத் தடுக்க நினைத்தால் இராணுவத்திற்கு விபரீத விளைவுகள் ஏற்படும்!

### யாழ். மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றியம் எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் இராணுவத்தினர் பாடசாலைகளுள் ஆயுதத்தோடு நுழைந்தும் சுற்றறிக்கைகளை அனுப்பி அதிபர் ஆசிரியர்களை மிரட்டியும் பார்க்கின்றனர். கடந்த கால சிறிலங்கா இராணுவத் தளபதி சந்திரபாலவும்- தற்போதைய சிறிலங்கா இராணுவத் தளபதி தென்னக்கோனும், மாணவர்கள் கருத்து வெளியிடுவதையும், உரிமைக்குரல் எழும்புவதையும், தடுக்க நினைப்பது விபரீத விளைவுகளைக் கொண்டு வரும் இவ்வாறு யாழ். மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றியம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

தமிழீழ மாணவர் எழுச்சி நாள் தொடர்பாக தமிழ் மாணவர் ஒன்றியம் வெளியிட்டுள்ள சிறப்புச் செய்தியிலேயே இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த சில மாதங்களில் பல மாணவர்கள் காட்டு மிராண்டித்தனமாகவும், கண் மூடித்தனமாகவும், தாக்கப்பட்டிருக்கின்றனர். சிறிலங்காப் பொலிசார் பாடசாலை வளாகத்தினுள் கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசியிருக்கின்றனர். இவையெல்லாம் மாணவர்களாகிய எங்களை ஆத்திர மூட்டுபவையாக இருக்கின்றன.

சுதந்திரமான கல்வியை கற்க முடியாத நிலையில் இன்று எம் மண்ணில் எத்தனையோ பாடசாலைகள் இயங்குகின்றன. முட்கம்பி வேலிகளுக்கு நடுவே தங்களைக் காத்துக்கொள்ள மாணவர்கள் கவசங்களாக்கப்பட்டுள்ளனர். அங்கு கற்கின்ற மாணவர்கள் பல்வேறு பட்ட அச்சுறுத்தல்களுக்கும் , இன்னல்களுக்கும், உள்ளாக்கப்பட்டு வருகின்றார்கள்.

மகளிர் பாடசாலைகளுக்கு முன்னால் முகாம் அமைத்துள்ள இராணுவத்தின் வெறிப் பார்வைக்கு பயந்து எத்தனையோ மாணவிகள் பாடசாலைக்குச் செல்ல அஞ்சுகின்றனர். கடந்த காலங்களில் இராணுவத்தால் நடந்த கொடுமைகள் இடம்பெறாதென என்ன நிச்சயம். திடீரென யுத்தம் மூண்டால் அந்த மாணவர்களின் நிலை என்ன?

இன்று இராணுவம் தனது அடக்கு முறைக்காக உளவியல் போரின் மூலம் மாணவர்களைச் சிதைக்கும் நடவடிக்கைகளில் இறங்கி இருக்கின்றது. அபாசப் படங்களையும், போதைப் பொருட்களையும் இளையவர்களிடம் வழங்கி திசை திரும்பும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றது இராணுவத்தின் அப்பகக்கடைகளும், ரொட்டிக் கடைகளும் சீரழிவை நோக்கி இழுக்கக் கையாளும் விடயங்கள். இவற்றை சிறிலங்கா இராணுவம் உடனடியாக நிறுத்த வேண்டும்.

இவை அனைத்திற்கும் விரைந்து முடிவெடுத்து செயலாற்ற வேண்டிய இராணுவக் கடப்பாடு யாழ். மாவட்ட சிறிலங்கா கட்டளைத் தளபதிக்கு உண்டு. எனவே மாணவர்களாகிய எங்கள் பிரச்சினைகளுக்கு மிக விரைவில் முடிவு வராத பட்சத்தில் தமிழ் மாணவர்களாகிய நாங்கள் எதிர்ப்பு நடவடிக்கைகளில் இறங்குவோம். இது சம்பந்தப்பட்ட கோரிக்கைகளையே இந்தத் தமிழீழ மாணவர் எழுச்சி நாளில் முன் வைக்கின்றோம் என அந்த சிறப்புச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# செவ்விளக்கு நாடக அரங்கப் பயணம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக கலைப்பீட நுண்கலைத்துறை நாடகமும், அரங்கியலும் மாணவர்களினால் ஆற்றுகை செய்யப்பட்டு வரும் செவ்விளக்கு நாடகமானது தனது அரங்கப் பயணத்தின் அடுத்த கட்டத்தை ஆரம்பித்துள்ளது.

வட்டுக்கோட்டை விக்டோறியா கல்லூரியின் திறந்த வெளி அரங்கில் எதிர்வரும் சனி, ஞாயிறு தினங்களில் மாலை 7.00 மணிக்கு இந்த அரங்க நிகழ்வு நடைபெறவுள்ளது.

# அரியாலையில் மீட்கப்பட்ட அடையாள அட்டைகள் காணாமல் போனோருடையதாக இருக்கலாம்

### -காணாமல் போனோர் பாதுகாவலர் சங்கம் சந்தேகம்

(அரியாலை)

அரியாலைப் பகுதியில் கைவிடப்பட்ட வீடொன்றினுள் அநாதரவாக கிடந்த நிலையில் மீட்கப்பட்ட ஆள் அடையாள அட்டைகள் தொடர்பில் பலத்த சர்ச்சைகள் எழுத்துள்ளன.

இவை 1996, 1997ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் படையினரால் கைது செய்யப்பட்டு காணாமல் போன தமிழ் இளைஞர், யுவதிகளினுடயதாக இருக்கலாமென படையினரால் கைது செய்யப்பட்டு காணாமல் போனோர் பாதுகாவலர் சங்கம் சந்தேகம் எழுப்பியுள்ளது.

இது பற்றி மேலும் தெரிய வருகையில்; அரியாலைப் பகுதியில் கடந்த காலப்பகுதியில் இராணுவ முகாமாக இருந்து கைவிடப்பட்ட தனது குடியிருப்பில் மீளக் குடியேறும் நோக்கில் உரிமையாளர் ஒருவர் கடந்த சில தினங்களுக்கு முன்னர் புனரமைப்பு செய்துள்ளார். அவ் வேளையில் பையொன்றினுள் சுற்றப்பட்ட நிலையில் இருந்த 30 இற்கும் அதிகமான ஆள் அடையாள அட்டைகளை புதைந்திருந்த நிலையில் கண்டெடுத்துள்ளார்.

இதனை உடனடியாக அப்பகுதி கிராமசேவையாளரிடம் அவர் கையளித்திருந்த நிலையில் கிராம சேவையாளர் பிரதேச செயலர் மற்றும் அரச அதிபருடாக அதனை யாழ் பொலிஸ் நிலையத்தில் கையளித்துள்ளார்.

இந்நிலையிலேயே குறித்த அடையாள அட்டைகள் அப்பகுதியில் வைத்து காணாமல் போனவர்களுடையதாக இருக்கலாமென பாதுகாவலர் சங்கம் சந்தேகம் எழும்பியுள்ளது.

இதன் காரணமாக அடையாள அட்டைகள் மாற்றப்பட்டு விடலாமெனவும் அவ்வமைப்பு குற்றஞ் சாட்டியுள்ளது.

இதனிடையே மேற்படி அடையாள அட்டைகள் அரியாலைப் பகுதியில் கண்டெடுக்கப்பட்டது தொடர்பாகவோ அவற்றை பற்றிய விசாரணைகளை முன்னெடுப்பது தொடர்பாகவோ தமக்கு பொலிசாரிடம் இருந்து எந்தவிதமான தகவல்களும் கிடைக்கவில்லை யென யாழ். நீதிமன்ற வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (27)

# ஆபாசத் திரைப்படங்களை கையாள்வோர் மீது எதிர் காலத்தில் கடும் நடவடிக்கை எடுக்கப்படும்

### -கலாச்சாரத்தை பேணும் அமைப்பு அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

ஆபாசத் திரைப்படங்களை வைத்திருப்போரும் வாடகைக்கு விடுவோரும், விற்பனை செயவோரும் இச்சமூகத்தின் குற்றவாளிகளாவர். இவர்களுக்கு எதிராக எதிர்காலத்தில் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என யாழ். மாவட்டத்தில் கலாச்சாரத்தை பேணும் அமைப்பு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அவ்வமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஒரு பாடசாலை மாணவர்களிடம் இருந்து எட்டு ஆபாசத் திரைப் படங் களின் இறுவட்டுக்கள் கலாச்சாரத்தை பேணும் குழுவினால் கைப்பற்றப்பட்டுள்ளன. சம்பந்தப்பட்ட மாணவர்களும் போதிய விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு அறிவுரைகளும் வழங்கப்பட்டு பெற்றோர்களிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

எதிரியானவன் எம்முடைய கலாச்சாரத்தையும் பண்பாட்டையும் அழிக்கும் நோக்குடன் திட்டமிட்ட வகையில் இத்தகைய பண்பாட்டுக்கு ஒவ்வாத கலாச்சார சீரழிவுப் படங்களின் பிரதிகளை விநியோகம் செய்து வருகின்றான். கொழும்பில் இருந்து பலாலியூடாக எந்தவித தடையும் இன்றி இப்படப் பிரதிகள் கொண்டு வரப்பட்டு யாழ்.குடா நாட்டில் பரவலாக குறைந்த விலையில் திட்டமிட்டு விற்கப்ப டுவதை அறியக் கூடியதாக இருக் கின்றது.

எனவே இவற்றைக் கையாளும் சகலரின் மீதும் எதிர்காலத்தில் கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (28)

# சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்கு ஈ.பி.டி.பி தரமற்ற பொருட்களை வழங்கியது

### பாராளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கீழியங்கும் சீனோர் எனப்படும் வடகடல் நிறுவனத்தினரால் சுனாமி கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தரமற்ற உபகரணங்களே வழங்கப்பட்டதாக பாராளுமன்ற உறுப்பினர் கே.சிவாஜிலிங்கம் எழுப்பிய குற்றச்சாட்டால் யாழ். செயலக கூட்டத்தில் பலத்த வாதப் பிரதி வாதங்கள் ஏற்பட்டது.

சுனாமி கடற்கொந்தளிப்பினால் பாதிக்கப்பட்ட பகுதி மக்களின் இயல்பு வாழ்க்கையினை கட்டியெழுப்புவது தொடர்பாக ஆராய்வதற்காக கூட்டமொன்று யாழ். செயலகத்தில் நேற்று முன்தினம் காலை இடம்பெற்றது.

யாழ். அரச அதிபர் கே.கணேஸ் தலைமையில் இடம்பெற்ற இக் கூட்டத்தில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களும், ஈ.பி.டிபியின் முக்கியஸ்தரும் வடகடல் நிறுவனப் பணிப்பாளராக தற்போது நியமிக்கப்பட்டுள்ளவருமான ந. மதனராசாவும், கலந்து கொண்டிருந்தனர்.

அங்கு உரையாற்றிய ந. மதனராசா வடகடல் நிறுவனத்தினரால் சுனாமி கடற்கொந்தளிப்பினால் பாதிக்கப்பட்டவர்களுக்கென வழங்கப்படும் உதவிகள் தடுத்து நிறுத்தப்படுவதாக குற்றம் சாட்டினார். ஆயினும் இதனை மறுதலித்த சிவாஜிலிங்கம் உதவி என்ற பெயரில் தரம் குறைந்த உபகரணங்களே வடகடல் நிறுவனத்தினரால் வழங்கப்பட்டதாகவும், முடிக்கப்படாத வேலைகளை முடிவுறுத்தி விட்டதாகவும், ஒப்புதல் கடிதம் சமர்ப்பிக்குமாறு கடற்தொழிலாளர்களிடம், கோரப்பட்டதையடுத்தே அவர்கள் அதற்கு ஆட்சேபனை தெரிவித்து உதவிகளைப் பெற்றுக் கொள்ள மறுத்ததாகவும், கூறினார்.

அதே வேளை அரசில் ஈ.பி.டி.பி அங்கம் வகிக்கும் போது சுனாமியால் பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர்களுக்கு எந்தவொரு உதவியும், வழங்கப்பட்டிருக்கவில்லை எனவும் தொண்டமைப்புக்கள் வழங்கும் உதவிகளை மட்டுமே அரசு வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பதாகவும் குற்றஞ் சாட்டினார். இதனையடுத்து இருவருக்குமிடையே நீண்ட நேரம் பலத்த வாக்கு வாதம் இடம்பெற்றிருந்தது. எனினும் ஏனையோரது தலையீட்டினை அடுத்து அங்கு சுமுக நிலை ஏற்படுத்தப்பட்டது. (27)

# காலாவதியான உணவுப் பொருட்கள் விற்பனை; சம்பந்தப்பட்டோர் மீது கடும் சட்ட நடவடிக்கை

### -யாழ்மாவட்ட மாகாண சுகாதார சேவைகள் பிரதிப்பணிப்பாளர்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடா நாட்டில் காலாவதியான உணவுப் பொருட்களை விற்பனை செய்வோருக்கு எதிராக சுகாதாரத் திணைக்களத்தால் கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென யாழ். மாவட்ட மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்;

அண்மையில் சுகாதார திணைக்கள உத்தியோகத்தர்களால் உணவகங்களிலும், வர்த்தக நிலையங்களிலும் மேற்கொள்ளப்பட்ட திடீர் பரிசோதனைகளின் போது விற்பனைத் திகதி காலாவதியான உணவுப் பொருட்கள் கண்டு பிடிக்கப்பட்டன. பொருட்கள் யாவும் கைப்பற்றப்பட்டு அந்த வர்த்தகர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

விற்பனைத் திகதி காலாவதியான உணவுப் பொருட்களால் உடல் நலத்திற்குத் தீங்கு விளையலாம். எனவே பொது மக்கள் பொதி செய்யப்பட்ட உணவுப்பொருட்களை வாங்கும் போது விற்பனை காலாவதி திகதியை அவதானமாகப் பார்த்து வாங்க வேண்டும்.

விற்பனைத் திகதி காலாவதியான உணவுப்பொருட்களை விற்பனை செய்யும் உணவகங்கள், வர்த்தக நிலையங்கள் பற்றிய தகவல்களை உடனடியாக உங்கள் பகுதி சுகாதார வைத்திய அதிகாரிக்கு அல்லது பொது சுகாதார பரிசோதகருக்கு அறியத்தரவும். சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக சுகாதார திணைக்களத்தால் கடும் சட்ட நடவடிக்கை மேற்கெள்ளப்படும்.

எனவே விற்பனைத் திகதி காலாவதியான உணவுப்பொருட்களின் விற்பனையை கட்டுப்படுத்த பொது மக்களின் ஒத்துழைப்பை எதிர் பார்க்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

சனாதிபதி சந்திரிகா அவர்கள் இப்பொழுது தனித்து நின்று களத்தில் இறங்கியுள்ளார். அவருக்கு பக்க பலமாக இருந்து செயற்படுவதற்கு ஒருவரும் இதுவரை முன்வரவில்லை. சுனாமி பேரலைகள் கூட்டு ஒப்பந்தம் மூலம் விடுதலைப்புலிகளுடன் இணைந்து வடக்கு கிழக்கை கட்டி எழுப்புவதற்காகவே தனித்து நின்று போராடுவதற்கு சந்திரிகா முன் வந்துள்ளார். கூட்டு ஒப்பந்தத்தை ஏற்படுத்தாவிட்டால் சமாதான நடவடிக்கைகளை முன்னெடுப்பதில் எந்தப் பிரயோசனமும் கிடையாது. என ஒரு வாரத்திற்கு முன் சனாதிபதி அவர்கள் கூறியிருக்கின்றார். தனது சனாதிபதி பதவி பறிபோனாலும் தான் கவலைப்படப்போவதில்லை. விடுதலைப்புலிகளுடன் கூட்டு ஒப்பந்தத்தை செய்தே தீருவேன் என்று ஆணித்தரமாக் கூறியுள்ளார்.

இந்த ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்த முடியாமல் போனால் கூட்டு அரசாங்கம் நடத்துவதில் எந்தப் பலனும் கிடையாது எனக் கூறியுள்ளார். நோர்வே ஏற்பாட்டாளர்களின் கருத்துப்படி கூட்டு ஒப்பந்தம் மேற்கொள்வதற்கு சகல ஆயத்தங்களும் தயார் நிலையில் உள்ளன. விடுதலைப்புலிகளும் அரசும் இதற்கு கட்டி எழுப்புவதற்கு மட்டும் செயற்படுத்தப்படும் என சனாதிபதி அவர்கள் கூறியுள்ளார்.

கூட்டு ஒப்பந்தம் செய்வதற்குஏன் எதிர்ப்புக் காட்டுகிறார்கள் என்பதை நாங்கள் ஆராய வேண்டும். இதற்கு இரண்டு காரணங்கள் கூறப்படுகின்றன. ஒன்று, வடக்கு கிழக்கு புனர்நிர்மாண வேலைகளை விடுதலைப்புலிகளிடம் வழங்குவது. அவர்கள் அரசுக்கு



சந்திரிகா

தைகள் சம்பந்தமாக ஒரு தீர்வை எட்டமுடியாத நிலைக்கு அரசியல் காய் நகர்த்தலை ஐக்கிய தேசியக் கட்சி மேற்கொண்டது. இதனால் மக்களின் ஆதரவு ஐக்கிய தேசியக் கட்சிக்கு இல்லாமல் போயிற்று.

ஆனால் சனாதிபதி சந் திரிகா அவர்கள் பாமர மக்கள் புரிந்து கொள்ளும் விதத்தில் அவர் அரசியல் பிரச்சாரங் களை செய்தார்.

இதனால் அவர் சிங்கள மக்களின் ஆதரவைப் பெற்றார். ஆனபடி யால் இனப்பிரச்சினைக்கு அரசியல் பேச்சு வார்த்தைகள் மூலம் தீர்வு காண்பது மிக அவசியம் என துணிந்து கூறினார். ஆனபடியால் தற்பொழுது எந்த நேரத்திலும் கூட்டு ஒப்பந்தத்தில் கையொப்பம் இடுவதற்கு சனாதிபதி தயாராகவே உள்ளார். இது இவரின் அரசியல் அணுகு முறையாகும். இந்தத் துணிவை


புலி களுக்கும் சனாதிபதிக்குமிடையில் கைச்சாத்தாகப் போகும் சுனாமி கட்டமைப்பை பலப்படுத்த வேண்டும். இது அவரின் அரசியல் நடவடிக்கைகளை மட்டுப்படுத்துவதற்காக அல்ல. இது பொது கட்டமைப்பை ஊக்குவிப்பதற்கு எடுக்கும் ராஜதந்திர நடவடிக்கைகளை பலப்படுத்துவதற்கே ஆகும். பேரினவாதிகளுக்கும் யுத்த வெறியர்களுக்கும் சனநாயக விரோதிகளுக்கும் சாட்டை அடி கொடுத்து அவர்களை மீண்டும் தலைதூக்க விடாமல் சனாதிபதி அவர்கள் பார்த்துக்கொள்வது மிக அவசிய மாகும்.

1959ஆம் ஆண்டு சந்திரிகாவின் தந்தை அப்போதைய பிரதமர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி பண்டாரநாயக்கவும் தமிழரசுக்கட்சி தலைவர் செல்வநாயகமும் செய்து கொண்ட ஒப்பந்தத்தை அமுல்படுத்தி இருந்தால் இந்த நாட்டில் இனப்பிரச்சினை என்ற ஒன்று ஏற்பட்டிருக்காது. இலங்கை ஒரு சமாதான நாடாக மலர்ந்திருக்கும். ஆனால் அந்த சமாதான ஒப்பந்தத்தை சிங்களவர்களாகிய நாங்கள் தான் கிழித்தெறிந்தோம். அதன் பலாபலனை இப்பொழுது நாங்கள் அனுபவிக்கிறோம். பண்டாரநாயக்கா அவர்கள் செல்வநாயகத்துடன் செய்து

# இன்று சனாதிபதி சந்திரிகா எதிர் கொள்ளும் சவால்— பண்டா-செல்வா ஒப்பந்தத்தைக் கிழித்தெறிந்ததன் பலாபலனே

இணக்கம் தெரிவித்துள்ளன. இந்தக் கூட்டு ஒப்பந்தம் சம்பந்தமாக முஸ்லிம் தரப்பில் முன் வைத்துள்ள யோசனைகளும் கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. விசேடமாக விடுதலைப்புலிகள் இவர்கள் முன் வைத்துள்ள யோசனைகளுக்கு விசேட கவனம் செலுத்தி உள்ளனர் என்று தகவல்கள் வெளிவந்துள்ளன.

சம்மதம் இல்லாமல் விடுதலைப்புலிகளும்



பண்டாரநாயக்கா

இந்தக் கூட்டு ஒப்பந்தம் கடல் எல்லையில் இருந்து இரண்டு கிலோமீற்றர் நீளத்திற்கு புனர்நிர்மாண வேலைகளை செய்து முடிப்பதே முடிவாகும் என்று குறிப்பிடப்பட்டுள் ளது. இதில் முஸ்லிம், தமிழ், சிங்கள இனத் தவர்கள் இணைந்து செயற்படுவார்கள் சமாதானப் பேச்சுக்கள் இடை நிறுத்தப்பட்டு இரண்டு வருடங்கள் கடந்து விட்டன. ஆனால் இதுவரை எந்த செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படவில்லை. சமாதானத்தை முன்னெடுக்காவிடில் தற் போதுள்ள சமாதான பேரவையால் நாட்டுக்கு எந்தப் பிரயோசனமும் ஏற்படப்போவதில்லை. இந்தக் கூட்டு ஒப்பந்தம் சுனாமி பேரலையால் அழிவுற்ற பிரதேசங்களை மீளக்

எதிரானவர்கள் ஆனால் அவர்களோடு சமாதான நிலைப்பாட்டுக்கு வராமல் சமாதான பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்க முடியாது. தற்பொழுது தமிழர்களின் ஏக பிரதிநிதிகள் விடுதலைப்புலிகள் என்பதை எல்லோரும் ஒப்புக் கொண்டுள்ளனர். ஆனபடியால் இவர்களுடன் பேச்சுவார்த்தைகளை கட்டாயமாக அரசு நடத்தியே தீரவேண்டும். இதை அரசும் ஒப்புக்கொண்டுள்ளது. இதுவே இன்றைய அரசியல் நிலைப்பாடு. நீண்டகால யுத்தத்தின் பிறகு மிக பலம் வாய்ந்த ஒரு அமைப்புடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கும் பொழுது பல உடன்பாடு களை ஏற்படுத்துதல் மிக அவசியம். இதில் முக்கியமாக உடன்படிக்கைகளை சிறந்த திசையில் நகர்த்த வேண்டும். இதில் சறுக்கினால் மீண்டும் வழுக்கி விழ வேண்டும். ஒவ்வொரு நகர்வும் மிக அவதானமாக மேற்கொள்ளவேண்டும். விடுதலைப்புலிகளுடன் தமிழ் மக்கள் எப்படி விசுவாசமாக நடந்து கொள்கிறார்களோ அதே போல் சிங்கள மக்களாகி நாங்களும் அவர்கள் மனதில் இடம் பிடித்துக்கொள்ள வேண்டும். ஒருகிலோ இறைச்சியை கேட்ட "சயிலொக்" கதையாக இந்த சமாதான பேச்சு வார்த்தையை நடத்த முடியாது. இந்த நடை முறைகளினால் ஏனைய மக்களின் ஒத்துழைப்பு இல்லாமல் போகும். ஆனபடியால் இந்தக் கூட்டு ஒப்பந்தத்தில் ஏனைய தரப்பினரையும் இணைத்துக் கொண்டால் தான் பேச்சு வார்த்தைகளை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்லமுடியும்.

கூட்டு ஒப்பந்தத்திற்கு மக்களின் அனுசரணை தேவைப்படும் பொழுது மேற் கூறிய இரண்டு பிரச்சினைகளையும் [illegible]பது மிக அவசியமாகும். இலங்கையின் சமாதான நடவடிக்கைகளுக்கு மக்கள் ஆதரவு கிடைக்காமைக்கு முதல் காரணம் அரசாங்கத்தின் அணுகுமுறையாகும். பிழையான அணுகு முறையால் தென்பகுதி மக்களின் ஆதரவை அரசாங்கத்தால் பெறமுடியாமல் போயிற்று. இதன் ஒரு பங்கினை ஐக்கிய தேசியக் கட்சியும் ஏற்றுக்கொள்ள வேண்டும். ஏனெனில் இரண்டு வருடகாலமும் சமாதான பேச்சுவார்த்

நாங்கள் பாராட்டுகிறேம். இந்தத் துணிகர செயலை அவர் நிறைவேற்றுவாரானால் தீவிரவாதக் குழுக்கள் இதற்கு எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் மேற்கொள்வதை தடை செய்யமுடியாது. இவைகளை எல்லாம் தோற்கடிப்பதற்கு சமாதான நடவடிக்கைகள் சம்பந்தமாக தீவிர பிரச்சாரங்களை சனாதிபதி மேற்கொள்வது மிக அவசியமாகும்.



தந்தை செல்வா

ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவான கொழும்பு வாழ் மக்கள் இன்னும் இந்த சமாதான வழிமுறையில் முழுமையாக ஈடுபடவில்லை. அரசாங்கம் பலவீனமடைவதையே உன்னிப்பாக கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். அரசாங்கம் பலவீனமடைந்து வருவதை தங்களுக்கு சாதகமாக்கிக் கொண்டு அரசை மீண்டும் கைப்பற்றுவதில் தனது முழுக்கவனத்தையும் செலுத்தி வருகிறார்கள். முஸ்லிம் கட்சி சரியான நிலைப்பாட்டிற்கு இன்னும் வரவில்லை. சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்குள் சனாதிபதிக்கு ஆதரவானோர் குறைவாகவே உள்ளார்கள்.

இத்தருணத்தில் நாங்கள் சனாதிபதியின் கையைப் பலப்படுத்த வேண்டும். விடுதலைப்

கொண்ட ஒப்பந்தத்திற்கு ஆதரவாக அரசியல் வாதிகளோ இந்த நாட்டின் பெரும்பான்மை இனத்தவர்களோ ஆதரவளிக்காதபடியால் ஒப்பந்தம் கிழித்தெறியப்பட்டது. இன்று நாங்கள் அந்நிய நாட்டவர்களுடன் யுத்தம் செய்வது போன்று எம் நாட்டு சகோதர மக்களுடன் யுத்தம் செய்து வருகிறோம். அன்று இந்த நாட்டின் பௌத்த குருமார்கள் எதிர்த்தார்கள் இதன் விளைவு பல்லாயிரக்கணக்கான மக்களை பலி எடுத்து கோடிக்கணக்கான சொத்துக்களையும்

ராவய சிங்கள நாளிதழ்
எழுதியவர் சுனந்த தேசப்பிரிய
மொழிஆக்கம் அ. சக்திவேல்

இழந்து யுத்தம் என்ற அரக்கன் இந்த நாட்டில் ஆட்சி புரிகிறான்.

இப்பொழுது பண்டாரநாயக்கவின் புதல்வி சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இதே நிலைக்கு முகம் கொடுத்துள்ளார். இன்று இந்த பொதுக் கட்டமைப்பை ஏற்றுக்கொண்டுள் ளார். உயிரைக்கொடுத்தாவது கட்டமைப்புக்கு கையொப்பம் இடுவதாக சாவால் விடுத்துள்ளார். தனது சனாதிபதி பதவி பறிபோனாலும் தாம் கவலைப்படப்போவதில்லை என்று கூறி உள்ளார். ஆணபடியால் பொதுக் கட்டமைப்பை கட்டாயமாக ஏற்படுத்த வேண்டும். இல்லையேல் ஆட்சி நடத்துவதில் எந்தப் பலனும் கிடையாது

அவர் கையொப்பம் இடுவதற்கு தவறினால், கையொப்பம் இட்டபின் ஜே.வி.பி யினா் அதை கிழித்தெறிந்தால் அது நாட்டில் பாரிய விளைவுகளை உண்டு பண்ணும். இதுவே அவர் இன்று முகம் கொடுக்கும் பெரும் சவாலாகும். அதனால் நாட்டின் அரசி யல் கட்சிகளையும் பொது மக்களையும் நாட் டின் சகல சமாதான விரும்பிகளையும் ஒன்றிணைத்து இந்தப் பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்த வேண்டும். இதை சனாதிபதி அவர்கள் வெற்றி கரமாக முடிக்க வேண்டும் என்பதே எமது பிரார்த்தனை ஆகும்.

## முன்பள்ளி கல்வி மேம்பாட்டிற்கான சந்திப்பு

முல்லை வலய முன்பள்ளி கல்வி மேம்பாட்டிற்கான சந்திப்பொன்று நேற்று முன்தினம் புதுக்குடியிருப்பிலுள்ள தமிழர் புனர்வாழ்வுக்கழக மாவட்ட செயலகத்தில் இடம் பெற்றது.

காலை 10.00 மணியளவில் முன்பள்ளி மேம்பாட்டு பிரதேச உபதலைவர் தி.தங்கவேலாயுதம் தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட முன்பள்ளிகளின் இணைப்பாளர் கலைவாணி புதுக்குடியிருப்பு பிரதேச முன்பள்ளிகளின் இணைப்பாளர் செல்வி.ஜெயசீலி, முள்ளியவளைப் பிரதேச முன்பள்ளிகளின் அபிவிருத்தி இணைப்பாளர் செல்வி.பிரதீஸ்வரி, முல்லைத்தீவு முன்பள்ளிகளின் அபிவிருத்தி இணைப்பாளர் செல்வி. தட்சாயினி, விசுவமடு பிரதேச முன்பள்ளிகளின் அபிவிருத்தி இணைப்பாளர் ந.தவசீலன் மற்றும் முன்பள்ளிகளின் முதன்மை ஆசிரியர்களும், சமூக திட்ட இணைப்பாளர்களும் கலந்து கொண்டனர். இக்கலந்துரையாடலில் முன்பள்ளிகளின் தற்போதைய நிலைபற்றி ஆராயப்பட்டது. (08)

## மன்னார் கடலில் இரு மீனவர் கைது வெடி மருந்தும் கைப்பற்றப்பட்டது

(மன்னார்)

மன்னார் தென்கடலில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மீன்பிடித்துக்கொண்டிருந்த டிங்கி இனப் படகை சோதனையிட்ட கடற்படையினர் அப்படகிலிருந்து நான்கு கிலோ கிராம் வெடிமருந்தும் 32 பாதுகாப்பு கிளிப்புகளையும் கைப்பற்றியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் படகுடன் இரண்டு மீனவர்களையும் கைது செய்து தலைமன்னார் பொலிசாரிடம் ஒப்படைத்துள்ளனர். இவர்களுக்கான மேலதிக விசாரணைகள் தொடர்ந்து நடை பெறுகின்றன. (18)

**எஸ்.சரவணபவான், (சிரேஷ்ட உதவிச்செயலாளர், திட்டமிடல், ஆசிரியர் நியமனக்கிளைகள், வடக்கு கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சு) அவர்கள் வடக்கு கிழக்கு பாடசாலைகளில் ஆங்கிலக்கல்வி விருத்தி தொடர்பாக வழங்கிய கருத்துக்கள்**

# வடக்குகிழக்கு பாடசாலைகளில் ஆங்கில பாட பெறுபேறு உயர்ந்துள்ளது



வடக்கு கிழக்கு மாகாணத்தில் ஆங்கிலக் கல்வி விருத்தியை மேம்படுத்துவதற்காக 240 பாடசாலைகளில் செயற்றிட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

கல்வி பொதுத்தராதர சாதாரணதர மாணவர்களை இலக்காக வைத்து சாதாரணதரத்தில் ஆங்கில பாடத்தின் பெறுபேற்றினை உயர்வடையச்செய்யும் நோக்குடன் இத்திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகின்றது. நிகொட், கார்ப் திட்டத்தினூடாக இது நடைமுறைப்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்திற்கு வடகிழக்கு மாகாணங்களில் உள்ள 24 கல்வி வலயங்களில் இருந்தும் வலயத்திற்கு பத்துப்பாடசாலைகள் வீதம் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இந்த 240 பாடசாலைகளில் ஒவ்வொரு பாடசாலைகளில் இருந்தும் இரண்டு ஆசிரியர்கள் வீதம் 480 ஆங்கில ஆசிரியர்கள் தெரிவு செய்யப்பட்டு இவர்களுக்கு இது தொடர்பாக பயிற்சி வழங்கப்பட்டு வருகின்றது.

இதன் முதற்கட்டமாக ஆங்கில ஆசிரிய ஆலோசகர்கள் பிரதான வளவாளர்களாக திருகோணமலைக்கு அழைக்கப்பட்டு அவர்களுக்கு தேவையான பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

இரண்டாவது கட்டமாக பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரிய ஆலோசகர்கள் வலய ரீதியாக தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்களுக்குப் பயிற்சிகளை வழங்குவார்கள்.

மூன்றாவது கட்டமாக தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளுக்குரிய மாணவர்களுக்கு இந்த ஆசிரியர்கள் கற்பித்தல் செயற்பாடுகளை மேற்கொள்வர்.


இறுதியில் மாணவர்களுக்கு பரீட்சை ஒன்று நடாத்தப்பட்டு அப்பரீட்சை பெறுபேறுகளின் படி மாணவர்களது ஆங்கிலப் பாடரீதியான முன்னேற்றம் கணிப்பீடு செய்யப்படும்.

இந்த மூன்று கட்டச்செயற்பாடுகளும் நான்கு அல்லது ஐந்து சுற்றுக்களாக மேற்கொள்ளப்படவுள்ளன.

இந்த இரண்டின் மூலமும் ஆசிரியர்கள் மாணவர்களுக்குரிய கற்பித்தலை மேற்கொள்வர்.

இத்திட்டத்திற்கென ஆறு இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்நிதியினை நிகொட் வழங்குவதற்கு இணங்கியுள்ளது.

இதில் தற்போது முதலாவது கட்டம் முடிவடைந்துள்ளது.



இதற்காக மாகாணக் கல்வி அமைச்சின் ஊடாக இரண்டு கையேடுகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

கல்விப் பொதுத்தராதர சாதாரணதர மாணவர்களுக்கு ஆங்கிலப் பாடத்தினை கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான வழிகாட்டிக் கையேடு, கல்விப்பொதுத்தராதர சாதாரணதரத்தில் ஆங்கிலப்பாடத்தினைக் கற்கும் மாணவர்களுக்கான முக்கிய கேள்விகள் அடங்கியகையேடு,

> **கடந்த வருட சாதாரணதரப்பரீட்சை பெறுபேற்று புள்ளிவிபரங்கள் இதனை தெளிவாக வெளிக் காட்டுகின்றன. இது எமக்கு மிகுந்த மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.**

இயற்கை அனர்த்தம் மற்றும் அரசியல் காரணங்களுக்காக இத்திட்டச் செயற்பாடுகளில் சிறிது தாமதங்கள் ஏற்பட்டுள்ளன.

ஆயினும் அண்மையில் நடைபெற்ற மீளாய்வுக் கூட்டம் ஒன்றில் விரைவுபடுத்தி இந்தச் செயற்றிட்டத்தினை முடிக்கும்படி கோரப்பட்டுள்ளது. இதற்கு மாகாணக்கல்வி அமைச்சு இணங்கியுள்ளது.

முதலாவது சுற்றுவட்டச் செயற்பாடு முடிவடைந்துள்ளது. இதன்படி கடந்த கல்விப்பொதுத்தராதர சாதாரணதரத் தேர்வில் ஆங்கிலப்பாடத்தின் பெறுபேறு ஓரளவுக்கு முன்னைய காலங்களை விட அதிகரித்துள்ளது.

கடந்த வருட சாதாரணதரப்பரீட்சை பெறுபேற்று புள்ளிவிபரங்கள் இதனை தெளிவாக வெளிக்காட்டுகின்றன. இது எமக்கு மிகுந்த மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த வருட சாதாரணதர பெறுபேற்றில் வடக்குக் கிழக்கில் கணிதபாட பெறுபேறுகளும் அதிகரித்துள்ளன. இந்த விடயமும் இங்கு மேலதிகமாகக் குறிப்பிட்டுச் சொல்லப்பட வேண்டும்.

மாணவர்களுக்கான பாடரீதியான செயற்றிட்டங்களின் தாக்கமே பாடரீதியான பெறுபேறுகள் அதிகரித்துள்ளமைக்குக் காரணம் என நாம் கருதுகின்றோம்.

தற்போது இவ்வருடம் டிசம்பரில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களை இலக்காக வைத்து

**தி.ஜெயக்குமார்**

செயற்றிட்டம் மேற்கொள்ளப்படுகின்றது.

இந்த செயற்றிட்டத்தில் சகல சுற்றுவட்டங்களும் பூர்த்தி செய்யப்படும்போது இன்னும் உயரிய பலனை, மாணவர்களின் கூடிய பெறுபேற்று அடைவை நாங்கள் எதிர்பார்க்கலாம்.

# ஓமந்தை பிள்ளையார் கோவிலில் திணிக்கப்பட்ட திடீர் புத்தர் சிலை!

வவுனியா ஓமந்தை பிள்ளையார் கோவில் நிலத்திலும் மூன்றடி உயரத்தில் புத்தர் சிலையைக் கடந்த மார்ச் மாதம் சிங்கள இராணுவத்தினர் அமைத்துள்ளனர்.

பிள்ளையார் கோவில் குருக்களாக இருந்தவரை சித்திரவதை செய்து அந்தப் பகுதியிலிருந்து விரட்டியடித்துள்ளனர் என்று அப்பகுதி மக்கள் கூறுகின்றனர்.

அங்கு வாழ்ந்த குருக்களின் நான்கு தலைமுறையினர் இந்தப் பிள்ளையார் ஆலயம் அருகிலேயே வசித்துவந்ததாகக் சுட்டிக்காட்டும் அம்மக்கள் அப்பகுதி மக்கள் அனைவரையும் கட்டாயப்புகைப்படம் எடுத்துள்ள சிங்கள இராணுவம் புத்தர் சிலைக்கு எதிராக எதுவித போராட்டத்தையும் நடத்தக்கூடாது எனவும் எச்சரித்துள்ளனர்.

இராணுவத்தினர் அங்கு இருப்பதால் பொது மக்கள் அச்சிலை அருகே செல்ல அச்சமடைந்த நிலையில் இருக்கின்றனர். தற்போது திணிக்கப்பட்டிருக்கும் புத்தர்சிலைக்கு அருகில் பல நூற்றாண்டு காலத்துக்கு முந்தைய வைரவர் சிலை இருப்பதைச் சுட்டிக்காட்டும் உள்ளூர்வாசி ஒருவர் அக்கோவிலில் இருந்த பழமையான பளிங்குக் கற்களைக் கொண்டே திடீர் புத்தர்சிலை அமைத்துள்ளதாகவும் போதிமரம் ஒன்றையும் கூட அருகாமையில் நட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

ஓமந்தை மகாவித்தியாலயத்திற்கு எதிரே முகாமிட்டுள்ள சிங்கள இராணுவத்தினர் வெசாக் பண்டிகை நாளின் போது இங்கே பழமையான புத்த விகாரை இருப்பதாக சிங்கள மொழியில் எழுதி வைத்துள்ளனர்.

பல தலைமுறையினராக அப்பகுதியில் வாழ்ந்து வரும் மக்கள் இதுவரையில் அப்படியானதொரு விகாரை தமது பகுதியில் இருந்ததேயில்லை. தற்போது சிங்கள இராணுவத்தினரால் தான் இது உருவாக்கப்பட்டது என்றும் அப்பிரதேசவாதிகள் கூறுகின்றனர்.

இதுகுறித்து வவுனியா அரச அதிபர், வன்னி பாராளுமன்ற உறுப்பினரும், ஓமந்தையைச் சேந்தவருமான சிவ சக்தி ஆனந்தன் ஆகியோரிடம் மக்கள் முறைப்பாடு செய்துள்ளனர்.

திடீர் புத்தவிகாரை குறித்து கருத்துத் தெரிவித்த சிவசக்தி ஆனந்தன் இதுவரையில் புத்த விகாரை இருந்தது என்பதாக நான் கேள்விப்படவில்லை என்றும், இது குறித்து உடனடியாக அரச அதிகாரிகளுக்குத் தெரிவிக்கப்பட்டு சிக்கலுக்குத் தீர்வு காணுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

1997ஆம் ஆண்டு சிங்கள இராணுவத்தின் ஜெயசிக்குறு இராணுவ நடவடிக்கையின் போது இப்பகுதி மக்கள் இடப்பெயர்வுக்குள்ளாகினர். 2003ஆம் ஆண்டு ஜூன் முதல் இப்பகுதிக்கு மக்கள் திரும்பத்தொடங்கினர்.

அப்போது இந்தத் திடீர் புத்த விகாரை உருவாக்கப்பட்டிருந்தது கண்டு அதிர்ச்சியடைந்தனர். 2004ஆம் ஆண்டு இந்தப் புத்தர் சிலையை மக்கள் அகற்ற முற்பட்டபோது சிங்கள இராணுவத்தினர் கடுமையாக அச்சுறுத்தியுள்ளனர்.

தற்போது திருமலை விவகாரத்தைத் தொடர்ந்து இந்தப் புத்தர்சிலை சிக்கலையும் மக்கள் வெளிப்படுத்தியுள்ளனர்.

# சென்ஜோன்ஸ் அம்பியூலன்ஸ் படைப்பிரிவினரால் மேற்கொள்ளப்பட்டுவரும் பயிற்சி நெறிகள்

(அலுவலக செய்தியாளர்)

வன்னி மாவட்ட சென்ஜோன்ஸ் அம்பியூலன்ஸ் முதலுதவிப்படைப்பிரிவினரால் இந்த ஆண்டின் கடந்த மாதத்தில் பல முதலுதவிப்பயிற்சி நெறிகளும், பல்வேறு சேவைகளும் வழங்கப்பட்டுள்ளன.

இப்பயிற்சி நெறித்திட்டத்தின் கீழ் கிளிநொச்சி தொழிற்நுட்பக்கல்வி நிறுவனத்துடன் இணைந்து கிளிநொச்சி, பூநகரிப் பிரதேசங்களில் தொழில்நுட்பக்கல்வி நிறுவனத்தில் மரவேலை, வானொலிப்பெட்டி திருத்துநர், மேசன் பயிற்சிபயிலும் மாணவர்களுக்கும், யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்களுடன் இணைந்து இலங்கை செஞ்சிலுவைச்சங்க அனுசரணையுடன் முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டப்பாடசாலைகளிலுள்ள மாணவர்களுக்கு முதலுதவிப் பயிற்சி நெறிகள் வழங்கப்பட்டுள்ளதுடன் புதுக்குடியிருப்பு கணக்கியல்கல்லூரி மாணவர்களுக்கு முதலுதவிப்பயிற்சியும் வழங்கப்பட்டு வருகின்றது. அதேபோன்று துணுக்காய், முல்லைத்தீவு கல்வி வலயங்களிலும், செஞ்சோலை சிறுவர் இல்ல மாணவர்களுக்கும், வன்னிமாவட்ட சென்ஜோன்ஸ் அம்பியூலன்ஸ் முதலுதவிப் படைப்பிரிவு முதலுதவிப் பயிற்சிகளை வழங்க திட்டமிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(சோ)

# பொது அமைப்புக்களுக்கான சந்திப்பு

(முழங்காவில்)

முழங்காவில் பிரதேச பொது அமைப்புக்களுக்கான சந்திப்பொன்று நேற்று முன்தினம் முழங்காவில் பிரதேச அரசியல் துறைச்செயலகத்தில் இடம் பெற்றது.

காலை பத்து மணியளவில் இடம் பெற்ற இந்நிகழ்வில், தமிழீழ தேசியக்கொடியினை தமிழீழ ஊரக வளர்ச்சிப்பொறுப்பாளர் கந்தன் ஏற்றிவைத்தார். அக வணக்கம் இடம் பெற்றதைத்தொடர்ந்து, தலைமை உரையை தேசிய எழுச்சிப்பேரவைப் பொறுப்பாளர் நவரத்தினராசா ஆற்றினார். சிறப்புரையினை தூயவன் அரசறிவியல் கல்லூரி அதிபர் அரசண்ணா ஆற்றினார். தொடர்ந்து கருத்துரையினை பூநகரி முழங்காவில் பிரதேச உதவி அரசாங்க அதிபர் நிகழ்த்தினார். அரச,அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், பொது அமைப்புப் பிரதிநிதிகள் என இச் சந்திப்பில் நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

# பொதுக்கட்டமைப்பு தந்தாலும் தூராவிட்டாலும் தமிழருக்கு வெற்றியே

## –கூட்டமைப்பு பா.உறுப்பினர் சிவாஜிலிங்கம்

(கொழும்பு)

தமிழ் மக்களுக்குப் பொதுக்கட்டமைப்பைத் தந்தாலும் வெற்றி, தூராவிட்டாலும் வெற்றி எங்களுக்கே ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுடைய துயர் துடைக்கப்பட வேண்டும் என்பதே எமது விருப்பம். இவ்வாறு அரச தொலைக்காட்சி ஒன்றின் சதுரங்க நிகழ்ச்சியின் போது தமிழ்த்தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே சிவாஜிலிங்கம் கூறினார்.

இதைப் பற்றித்தெளிவாக எடுத்துக்கூறி இதனை ஏற்படுத்துவதற்கு சனாதிபதி எடுக்கின்ற முயற்சிக்கு இன்றைக்கு ஜே.வி.பி யினர் ஆட்சியை விட்டு வெளியேறுவதாக பண்ணமிருக்கின்ற பொழுது நான் கூறுகிறேன் ஜே.வி.பி.யினரை உதைத்தாலும் அவர்கள் ஆட்சியை விட்டு வெளியே செல்லமாட்டார்கள். வேண்டுமென்றால் சுதந்திரக் கட்சியே வெளியே போகுமே தவிர ஜே.வி.பியினர் போக மாட்டார்கள்.

இறுதியாக நாம் கூறுகிறோம் சனாதிபதி எடுக்கின்ற முயற்சிகளுக்கு நாங்கள் பக்கபலமாக நிற்போம். ஐக்கிய இலங்கைக்குள் இர்ந்த நிமிடம் வரை தீர்வுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தயாராக இருக்கின்றது.

தொலைக்காட்சி நிகழ்ச்சிக் கலந்துரையாடலின் போது ஜே.வி.பியினரின் சார்பில் இராமலிங்கம் சந்திரசேகரன் (எம்.பி) முஸ்லிம் காங்கிரசின் மாற்றுக்குழுவின் சார்பில் புனர்வாழ்வு மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தி அமைச்சர் எம்.எஸ்.எஸ் அமீர் அலி ஆகியோர் கலந்துகொண்டனர்.

தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் நாங்கள் கூறுகிறோம். எங்களுடைய சம்மதம் இலங்கையினுடைய அரசியல் அமைப்பிற்கு வழங்கப்படவில்லை. போர்த்துக்கீசர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் காலத்திலிருந்து எங்களது சம்மதமில்லாமல் இலங்கை அரசியல் யாப்பு உருவாக்கப்பட்டது. இன்றைய குடியரசு அரசியலை உருவாக்கிய போதும் தமிழ் மக்களின் சம்மதம் பெறப்படவில்லை. ஆகவே எங்களது இறைமைகள் அங்கு சென்றடையவில்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# நுவரெலியா பத்தனைப் பிரதேசத்தில் ஆயுதங்களுடன் மூவர் கைது

பத்தனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் ஆயுதத்துடன் மூன்று பேர் சந்தேகத்தின் பேரில் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். கண்டியிலிருந்து தலவாக்கலை நோக் கிச் சென்ற லொறி ஒன்றை போஹாவத்த சோதனைச் சாவடியில் வைத்து சோதனையிட்ட போது 303 ரக துப்பாக்கியொன்று கைப்பற்றப் பட்டதாக பத்தனைப் பொலிசார் தெரி வித்தனர்.

நேற்று முன்தினம் இரவு 11.00 மணியளவில் இடம் பெற்ற இந்தச் சம்பவத்தை அடுத்து லொறியில் பயணம் செய்த மூன்று பேரை கைது செய்து விசாரணை செய்து வருவதா கவும் இவர்கள் நுவரெலிய மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படவுள் ளதாகவும் பத்தனைப் பொலிசார் மேலும் தெரிவித்தனர்.

# தனியார் சிற்றூர்தி விபத்து இருபது பேர் காயம்

(கொழும்பு)

நாவலப்பிட்டியில் இருந்து தலவாக்கலையை நோக்கிப் பயணித்த தனியார் சிற்றூர்தி ஒன்று விபத்துக்குள்ளாகியுள்ளது.

நேற்று முன்தினம் பிற்பகல் 3.30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.இதன்போது காயமடைந்த 20 பேர் வரை நுவரெலிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.இதில் நால்வரின் நிலை கவலைக்கிடம் என அறிவிக்கப்பட்டுள்ளது.ஒருவர் கொட்டகலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

### வடக்கு கிழக்கு சுகாதார ஊழியர் வேலை நிறுத்தப்போராட்டம்

(கொழும்பு)

வடக்குகிழக்கில் பணிபுரியும் சுகாதார ஊழியர்கள் வரும் வேலை நிறுத்தப்போராட்டம் ஒன்றை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளனர். வரவு-செலவு திட்டத்தில் அரச ஊழியர்களுக்கு அதிகரிக்கப்பட்டுள்ள சம்பள உயர்வுகள் வடக்கு,கிழக்கு சுகாதார ஊழியர்களுக்கு வழங்கப்படவில்லை. இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வரும் 8ஆம் திகதி சுகாதார ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்யப் போவதாக அறிவித்துள்ளனர்.



நோர்வேயில் நடைபெற்ற தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் 20 ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வின் போது...

# எஸ்.பி.மேன்முறையீடு

தமது பாராளுமன்ற உறுப்பினர் நிலையை இரத்துச்செய்வதைத் தடுக்க வேண்டுமெனக் கோரி முன்னாள் அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க நேற்று முன்தினம் விசேட மேன்முறையீடு ஒன்றை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார். நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டின் பேரில் சிறையில் வைக்கப்பட்டுள்ள எஸ்.பி. திஸாநாயக்க தமது பாராளுமன்ற உறுப்புரிமை இரத்துச் செய்யப்படுவதைத் தடுக்கவேண்டும் எனக்கோரி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ஏற்கனவே மனுத்தாக்கல் செய்திருந்தார். எனினும் அதனை மேன்முறையீட்டு நீதிமன்றம் நிராகரித்திருந்தது தெரிந்ததே. (32)

# சுனாமியால் பெற்றோரை இழந்த பிள்ளைகளுக்கு உதவ நிதியம்

(கொழும்பு)

ஆழிப்பேரலையால் பெற்றோரை இழந்த பிள்ளைகளின் கல்விக்கு உதவ நிதியம் ஒன்று தொடங்கப்படவுள்ளது.

சுமார் 4000 பிள்ளைகள் பெற்றோரை இழந்துள்ளனர். இவர்களுக்கு இந்த நிதியத்தின் மூலம் மாதம் 5000 ரூபா வீதம் வழங்கப்படவுள்ளது.

சனாதிபதியின் கண்காணிப்பின் கீழ் ஆரம்பிக்கப்படவுள்ள நேஹா எனப்படும் இந்நிதியத்தின் தலைவியாக வைத்தியர் ரிரான்த்தி விஜேமான்ன பணியாற்றவுள்ளார்.

சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை, சிறுவர் நன்னடத்தை பாதுகாப்பு திணைக்களம், தேசிய சேமிப்பு வங்கி ஆகியன இந்த நிதியத்திற்கு தங்களின் பங்களிப்பை வழங்குகின்றன.

ஆழிப்பேரலையில் தாயையோ, தந்தையையோ அல்லது இருவரையுமோ இழந்த பிள்ளைகளுக்கு அவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்காக மாதாந்தம் 2500 ரூபா பணம் வழங்கப்படுவதுடன் வங்கியில் அவர்களின் பெயரில் மாதாந்தம் 2500 ரூபா வீதம் நிரந்தர வைப்பீடாக போடப்படும். இவர்களுக்கு வழமையான வட்டியை விட ஒரு சதவீத வட்டி கூடுதலாக வழங்கப்படும். 18 வயது நிரம்பிய பின்னர் இவர்கள் தமது வங்கிக் கணக்கிலிருக்கும் பணத்தை எடுக்க முடியும்.

நேஹா நிதியத்தின் ஆரம்ப வைபவம் நேற்று முன்தினம் மாலை தேசிய சேமிப்பு வங்கியின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

# வவுனியா சின்னப் புதுக்குளம் பகுதியில் 85 வீடுகள் கட்ட மூலப்பொருட்கள் வழங்கல்

வவுனியா சின்னப்புதுக்குளம் பகுதியில் இராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்த மக்களுக்கு நோர்வே நாட்டின் வெளிவிவகார அமைச்சின் அகதிகளுக்கான அமைப்பு 85 வீடுகளை கட்டிக் கொடுக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

அந்த அமைப்பினால் 2 இலட்சம் பெறுமதியான பொருட்கள் வழங்கப்படுகின்றது வீட்டின் உரிமையாளர்கள் தமது பங்களிப்பின் ஊடாகவே மேற்படி வீடுகளைக் கட்டி முடிக்க வேண்டுமென்று தெரிவிக்கப்படுகிறது.

1990ஆம் ஆண்டு இராணுவ நடவடிக்கையின் போது இடம்பெயர்ந்த மக்கள் தற்போது படிப்படியாக மீள குடியமர்ந்து வருகிறார்கள். வீடுகள் அனைத்தும் இராணுவத்தினால் அழிக்கப்பட்ட நிலையில் தற்காலிகமான கொட்டகைகளில் வாழ்ந்து வரும் இந்த மக்களுக்கு இவ்வாறு ஒரு திட்டம் மூலமாக வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுத்திருப்பதாக அந்த அமைப்பின் பிரதிநிதி தெரிவித்தார்.

கு.. போது வீட்டுப் பணிகள் வ... வாக நடந்து வருவதாகவும் அந்த மக்களின் முயற்சியால் அந்த வீடுகள் கட்டப்படுவதன் காரணமாக அவர்கள் மனதாரத் திருப்தியடைவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (21)

# வாரத்தில் ஐந்து நாட்கள் மட்டும் வைத்தியர்கள் கடமையில்

## –வைத்தியர் சங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

நாடு முழுவதிலும் உள்ள அரச வைத்தியசாலையில் வாரத்தில் ஆறுநாட்கள் கடமைபுரியும் வைத்தியர்கள், வைத்திய நிபுணர்கள் இனிமேல் வாரத்தில் ஐந்து நாட்கள் வைத்திய கடமைகளில் ஈடுபடப் போவதாகவும் இனி சனி,ஞாயிறு தினங்களில் இவர்கள் கடமையில் ஈடுபடமாட்டார்கள் என தேசிய வைத்தியர் சங்கம் தெரிவித்துள்ளது.

வைத்தியர்களின் சேவைகளுக்கு மதிப்பு கொடுக்காமல் அவர்களுக்கு எதிராக பொய்க்குற்றச் சாட்டுக்களை பல குழுக்கள் சுமத்தி உள்ளபடியால் இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதென வைத்திய சங்கம் தெரிவித்துள்ளது.


**பியர் போத்தல் கொள்வனவு செய்யப்படும்**

எமது நிறுவனத் தேவைக்காக பியர் வெற்றுப்போத்தல் 625 மி.லீ நியாயமான விலையில் மொத்தமாகவும், சில்லறையாகவும் கொள்வனவு செய்யப்படும். (நல்ல நிலையில் உள்ள போத்தலாக இருக்க வேண்டும்)

தொடர்பு:-வடமாகாண ப.தெ.வ.அ.
கூ. நிபேரிணையம்,
(வெண்புறா முன்பாக)
கண்டிவீதி, கிளிநொச்சி (சி12164)



**பணியாளர் தேவை**

1.சாரதி அனுமதிப்பத்திரமுள்ள கனரக வாகன ஓட்டுனர் குறைந்தது மூன்று வருட அனுபவம் (வயதெல்லை 30 தொடக்கம்55 வரை)

2.கனரக இயந்திர இயக்குனர் (EXCAVATOR OPERATOR), இரண்டு வருட அனுபவம்.

3.இயந்திர திருத்துனர்.

மேற்படி பதவிகளுக்கு தகுதி உடையோர் நற்சான்றிதழுடன் நேரில் வரவும்.

யூரோவில்,
முல்லை. மாவட்ட வைத்தியசாலை நிர்மாணம்,
மாஞ்சோலை,
தண்ணீரூற்று (6219)

# காஷ்மீர்பிரச்சினை தீர ஒத்துழைப்புத் தருக;
## பாக். அதிபர் முஷாரப்பிடம் அத்வானி வலியுறுத்து

(இஸ்லாமபாத்)

இஸ்லாமாபாத்தில் பாகிஸ்தான் அதிபர் முஷாரப்பைச் சந்தித்த அத்வானி காஷ்மீர் பிரச்சினை தீர ஒத்துழைப்புத் தரும்படி கேட்டுக் கொண்டார்.

பா.ஜ கட்சியின் தலைவரும், எதிர்க் கட்சித் தலைவருமான அத்வான பாகிஸ் தானுக்கு ஒருவாரகால சுற்றுப்பயண மாகப் புறப்பட்டுச் சென்றுள்ளார். லாகூர் சென்ற அவர் நேற்று முன் தினம் அங்கிருந்த விமானம் மூலம் பாக். தலைநகரான இஸ்லாம பாத்துக்குச் சென்றார்.

இஸ்லாமபாத் விமான நிலையத்தில் பாகிஸ்தான் முஸ்லிம் லீக்கட்சி யின் பொதுச் செயலாளர் சையத் முசாகித் உசைன், அத்வானியை வரவேற்றார்.

அத்வானி நேற்று முன்தினம் பாக் பிரதமர் சவுகத் அசிசை 45 நிமிட நேரம் சந்தித்துப் பேசினார். காஷ்மீர் உட்பட முக்கிய பிரச்சினைகள் குறித்து அவர்கள் விவாதித்தார்கள். இந்தச் சந்திப்புக்குப் பின் பாக். பிரதமர் சவுகத் அசிஸ் துருக்கி நாட்டுக்குப் புறப்பட்டுச் சென்றுவிட்டார்.

பின்னர் அத்வானி நிருபர்களிடம் பேசி னார். அவர் கூறியதாவது, பாக் பிரதம ருடன் ஆக்க பூர்வமாகப் பேச்சு நடத்தினேன். காஷ்மீர் பிரச்சினை வர்த்தகம் , இருதரப்பு ஊடகத் தொலைத்தொடர்பு பற்றியும் நாங்கள் விவாதித்தோம் எனத் தெரிவித்தார்.

அத்வானி அதன் பின்பு பாக். அதிபர் முஷாரப்பையும் சந்தித்துப் பேசினார். ஒரு மணி நேரம் இந்தச் சந்திப்பு நடந்தது. அப்போது காஷ்மீர் பிரச்சினைதீர பாரதிய ஜனதாக் கட்சி முழு ஒத்துழைப்பு தர வேண்டும் என்று முஷாரப் கேட்டுக் கொண்டார். நேற்று முன்தினம் மாலை பாக். வெளியுறவுத்துறை அமைச்சர் குர்சித் மக்முத் கசூரியை அத்வானி சந்தித்துப் பேசினார்.



தமிழகக் கடல்களில் மீன்வளத்தைப் பெருக்குவதற்காக 45 நாட்கள் மீன்பிடிக்க விதிக்கப்பட்டிருந்த தடை நீங்கியது. இந்நிலையில் ராமேஸ்வரத்தில் நேற்று முன்தினம் அதிகாலையில் மீனவர்கள்கடலுக்குச் சென்றுவிட்டு பிடிபட்ட மீன்களுடன் கரைக்குத் திரும்புகின்றனர்.

# பீகாரில் லோக் ஜனசக்தி தனித்துப் போட்டி;
## மத்திய அமைச்சர் பஸ்வான் திடீர் முடிவு

(கோவை)

பீகார் சட்டசபைக்கு நடக்க விருக் கும் தேர்தலில் தலித் மற்றும் சிறு பான்மை சமுதாயத்தினரின் வாக்கு களுடன் லோக் ஜனசக்தி தனித்து போட்டியிட்டு அதிக தொகுதிகளில் வெற்றிபெறும் என்று அக்கட்சித் தலைவரும் மத்திய அமைச்சருமான ராம்விலாஸ் பஸ்வான் நம்பிக்கை தெரிவித்தார்.

மத்தியில் ஆளும் ஐக்கிய முற் போக்கு கூட்டணியில் லோக் ஜன சக்தி உள்ளது. பீகார் அரசியல் நிலை வேறு,நாங்கள் கொள்கையில் இருந்து ஒருபோதும் மாறமாட்டோம்.

கடந்த பீகார் தேர்தலில் நான் தான் முதல்வர் என்று பிரச்சாரம் செய்யவில்லை. ராஷ்டிரிய ஜனதாத் தளம், பாரதிய ஜனதாக் கூட்டணி, காங்கிரஸ் கூட்டணிக்கட்சிகளை எதிர்த்து தனித்துப்போட்டியிட்டு 30 இடங்க ளைப் பிடித்தோம். இப்போதும் அதேபோல் தேர்தலை சந்திப்போம்.

நாங்கள் யாருடனும் மோதல் போக்கினை கடைப்பிடிக்கவில்லை. குஜராத் கலவரத்தினால் தேசிய ஜனநாயகக் கூட்டணியில் இருந்து விலகினோம். அதேபோல் தான் பீகாரில் ராப்ரிதேவியின் ஊழல் அரசை எதிர்த்து தலித் மக்களை ஒருங்கி ணைத்து போட்டியிட்டோம். பெரும் பான்மையை நிரூபிப்பதற்காக பலர் ஆதரவு கேட்டனர். மதச்சார்பற்ற கட்சி கள், ஒரு முஸ்லிமை பீகார் முதல் வராக நியமித்தால் ஆதரவு கொடுப் பேன் என்று கூறினேன். யாரும் அதை ஏற்றுக்கொள்ளவில்லை.

இப்போது சனாதிபதி ஆட்சி அமுல் செய்யப்பட்டுள்ளது. இன்னும் ஒரு ஆண்டு போகட்டும். அதன் பின் தேர்தலை மீண்டும் சந்திக்கிறோம். ஆனால் எங்கள் கொள்கையில் இருந்து பின்வாங்க மாட்டோம். அதே போல் நான் யாரையும் ஏமாற்றவும் இல்லை. தே.ஜ கூட்டணி தான் ஆட் சியைப் பிடிக்க குதிரைப்பேரம் நடத் தினர். நான் நடத்தவில்லை. இதனால் என்னுடைய மதிப்பு பீகாரில் உயர்ந் துள்ளது.

தலித் மக்களின் ஆதரவுடன் கடந்த தேர்தலை நான் சந்தித்தேன். இப்போது பீகாரில் ஒரு முஸ்லிம் தான் முதலமைச்சராக வேண்டும் என்று வலியுறுத்தி வருகிறேன். எனவே சிறு பான்மையினரின் ஆதரவும், எனக்கு உறுதுணையாக இருக்கும். பீகாரில் தலித் மற்றும் முஸ்லிம்களின் வாக்கு வாங்கி 35 சதவீதம் உள்ளது.நாங்கள் அதிக இடங்களைப் பிடிப்போம் இவ் வாறு ராம்விலாஸ் பஸ்வான் கூறினார்.

# தென் மாநிலங்களில் கடலோரப் பாதுகாப்புக்கு காவல்நிலையங்கள் அமைப்பு

(புதுச்சேரி)

தென்மாநிலங்களில் கடலோர பாது காப்புக்கு 500 கோடி ரூபா செலவில் காவல் நிலையங்கள் அமைக்கப்படவுள்ளதாக மத்திய அமைச்சர் சிவராஜ் பட்டேல் கூறினார்.புதுவை அண்ணாமலை விடுதியில் தென் மாநில முதல் வர்கள் மாநாடு நேற்று முன்தினம் நடந்தது. இந்த மாநாட்டில் பேசப்பட்ட அம்சங்கள் குறித்து மத்திய உள்துறை அமைச்சர் சிவராஜ்பட்டேல் நிருபர்களிடம் கூறுகையில்;

நாட்டில் உள்ள நதிகளை இணைக்க வேண்டும் என்றும், லட்சத்தீவில் விமானத்தளம், உலங்குவானூர்தித்தளம் அமைக்க வேண்டும் என்றும் தென்மாநில எரிவாயு வழங்கல் அமைப்பு அமைக்க வேண்டும் என்றும் கோரப்பட்டுள்ளது. தென்மாநில கடலோரப் பகுதிகளில் இயற்கை பேரழிவு குறித்து முன்கூட்டியே எச்சரிக்கை செய்யும் மையங்களை அமைக்க வேண்டும் என்றும்யோசனை செய்யப்பட்டது. இயற்கை பேரழிவு நிர்வாகம் தொடர்பாக மத்திய மாநில குழுக்கள் ஏற்படுத்த வேண்டும் என்று சட்டம் கொண்டுவரப்பட இருக்கிறது. இந்த அமைப் புக்கள் ஏற்படுத்தப்பட்டால் இயற்கை சீற்ற பாதிப்புக்களைக் குறைக்க முடியும்.

தென் மாநிலங்களில் கடலோரப் பாதுகாப் பிற்காக கடலோரக் காவல் நிலையங்கள் அமைக் கப்பட இருக்கிறது. இதற்காக அந்தக் காவல் நிலையங்களுக்குப் படகுகள் கொடுக்கப்படும். இவர்களுக்கு கடலோர காவல் படை தேவை யான உதவிகளைச் செய்யும்.

ஒரு குறிப்பிட்ட தூரத்திற்கு மேல் உதவி தேவைப்பட்டால் அந்த உதவியை இந்தியக் கடற்படை அளிக்கும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# திருட்டுநபர் அடித்துக்கொலை

சாயர் புரம் அருகே கொலை, திருட்டு வழக்கு களில் தொடர்புடைய பிரபல நபர் அடித்துக் கொலை செய்யப்பட்டார். இது தொடர்பாக இரண்டு பெண் உட்பட மூன்று பேரைப் பொலிசார் கைது செய்தனர்.

தூத்துக்குடி மாவட்டம் சாயர்புரம் கோபால கிருஷ்ண தெருவைச் சேர்ந்தவரே அடித்துக் கொல்லப்பட்டார். இவர் மீது கொலை திருட்டு கொலை கள்ளச்சா ராய வழக்குப் போன்ற பல குற்ற வழக்குகள் உள்ளன. இவரை இவரது உறவினர்கள் அடித்துக் கொலை செய் துள்ளனர்.

# சாவு அறிவித்தல்

*அமரர்*

திருமதி **செல்லையா தங்கம்மா**

கோப்பாயைச் சொந்த முகவரியாகக் கொண்டவரும், கோப்பாயில் வசித்துவந்தவருமான காலம் சென்ற சிதம்மரி வைரம் பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், செல்லையாவின் அன்பு மனைவியுமான செல்லையா தங்கம்மா அவர்கள் 31.05.2005 அன்று காலமானார்.

அவர் தில்லை நடராசா (றெட்பானா), செல்வராசா (கனடா),தியாகராஜா(கைதடி), அழகராசா (பிரான்ஸ்), தவமணிதேவி (விசுவமடு), சறோஜினி தேவி (கோப்பாய்) ஆகயோரின் அன்புத் தாயாரும், விசாலினி தேவி (றெட்பானா),சண்முகம் (விசுவமடு), பத்மநாதன் (கோப்பாய்), சுகன்யா (பிரான்ஸ்), பரமேஸ்வரி (கைதடி) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், டிலானி,டிலோஜினி, டிசாந்தினி, டிலக்சினி, டிலாறா,டிலக்சன் (றெட்பானா), அனுசியா (பிரான்ஸ்),கிருஷாந்தி,கிருஷாந்தன்,டிசாந்தி (கைதடி) ஆகியோரின் அப்பம்மாவும், தயாபரன் மொறட்டுவ பல்கலைக்கழக பொறியியலாளர் (பாரின்), தயானந்தி (யாழ்.பல்கலைக்கழகம்),சந்தியப்பிரியா (விசுவமடு), அபிராம்,திருவரங்கன், ஜீவிதா, கோபி சங்கர் (கோப்பாய்) ஆகியோரின் அம்மம்மாவும்,றுஜானி (றெட்பானா) என்பவரின் பூட்டியுமாவார். அன்னாரது அடக்க ஆராதனை பெந்தேக்கொஸ்த்தே முறைப்படி அன்னாரின் வீட்டில் நடைபெறும். அடக்க நாள் பின்னர் அறிவிக்கப்படும். இதனை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

முகவரி:- செல்லையா தங்கம்மா,
நாவலர் பாடசாலை அருகாமை,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

தகவல்:- மகன்
தில்லை நடராசா,
(ஏபிரகாம்)றெட்பானா,
விசுவமடு.

(6228)

# நெஞ்சை விட்டகலாத முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**சித்தர்-காசிநாதர் பொன்னம்பலம்**

(விவாக, இறப்பு,பிறப்பு பதிவாளர்)

(திதி:-02.06.2005)

கண்மூடித் திறந்தது போலிருந்தது
உங்கள் மறைவு
எத்தனை யுகங்கள் கடந்தாலும்
எண்ணம் உங்கள் நினைவுகளுடனே
என்றும் நாம் வாழ்ந்து கொண்டிருப்போம்.

தோற்றம்
06.06.1950

கரைச்சி, கண்டாவளை.

மறைவு
12.06.2004

கோணங்குளம்,
கண்டாவளை.

தகவல்:-
குடும்பத்தினர்.

(6229)

# இவ்வாண்டு இறுதிக்குள் சச்சின் டெண்டுல்கரின் விளையாட்டு வாழ்க்கை முடிவிற்கு வந்து விடும்

## பாகிஸ்தான் ஜோதிடர் கணிப்பு



இந்திய கிரிக்கெட் அணி நட்சத்திர வீரரான டெண்டுல்கரால் சமீப காலமாக பிரகாசிக்க முடியவில்லை. ஒருநாள் போட்டி, டெஸ்ட்போட்டி இரண்டிலுமே அவருடைய துடுப்பாட்டத் திறமை குறைந்து இருந்தது. இடது முழங்கையில் ஏற்பட்ட காயம்தான் இதற்குக் காரணம் என்று கூறப்பட்டது.

இந்த நிலையில் அவருக்கு லண்டன் வைத்திய சாலையில் இப்போது சத்திரசிகிச்சை செய்யப்பட்டுள்ளது.

இதற்கிடையே பாகிஸ்தான் லாகூரைச் சேர்ந்த பிரபல ஜோதிடர் அப்துல்லாசவுகத் சவுத்திரி டெண்டுல்கர் விளையாட்டு வாழ்க்கை குறித்து கணிப்புக்களை வெளியிட்டுள்ளார்.

டெண்டுல்கரின் விளையாட்டு வாழ்க்கை இந்த ஆண்டு இறுதிக்குள் முடிவுக்கு வந்து விடும். இனி அவரால் பிரகாசிக்க முடியாது. டெண்டுல்கரின் ராசி நட்சத்திரங்களை வைத்து நான் கணித்துப் பார்த்ததில் இது தெளிவாகத் தெரிகிறது. சமீபத்தில் அவருக்கு நடந்த சிகிச்சை இதை உறுதி செய்கிறது என்று அவர் கூறியுள்ளார்.

லண்டன் பி.பி.சி தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியின் போது அவர் இந்தக் கணிப்பை வெளியிட்டார்.

ஜோதிடர் அப்துல்லா சவுகத் சவுத்திரிக்கு 70 வயது ஆகிறது. ஏற்கனவே இவர் வெளியிட்ட பல கணிப்புக்கள் அப்படியே நடந்துள்ளன.

1980 இல் பாகிஸ்தான் வீரர் இம்ரான்கானுக்கு காலில் காயம் ஏற்படும் என்று கூறியிருந்தார். அதன்படி நடந்தது. 2005இல் போப்பாண்டவர் 2ஆம் ஜோன்போல் உடல்நலம் இல்லாமல் மரணம் அடைவார் என்று கூறி இருந்தார் அதுவும் நடந்தது.

2004இல் தெற்கு ஆசியாவில் பூமி அதிர்ச்சி தாக்கும், இங்கிலாந்து பிரதமர் டொனி பிளேயர் மூன்றாவது முறையாக தேர்தலில் வெற்றி பெறுவார் என்று கூறியிருந்தார் அதுவும் நடந்தது. இந்திய அணி கடந்த ஆண்டு பாகிஸ்தானில் சுற்றுப் பயணம் செய்த போது இந்தியா 2-1 என்ற முன்னணியில் வெற்றி பெறும் என்று அவர் கூறியிருந்தார் நடந்தது.

ஆனால் இன்னொரு ஜோதிடக் கணிப்பு டெண்டுல்கர் ரசிகர்களுக்கு ஆறுதல் அளிக்கும் வகையிலுள்ளது. அதில் டெண்டுல்கர் ஒரு நாள் போட்டியில் 15 ஆயிரம் ஓட்டங்களைக் கடந்து விடுவார். கவாஸ்கரின் 34 டெஸ்ட் சதத்தை முறியடிப்பார் என்று குறிப்பிட்டுள்ளது.

டெண்டுல்கரின் பிறந்த நட்சத்திரம் பூராடம் ஆகும். சனி அவருக்கு சாதக பலனைத்தரும் இடத்தில் இருக்கிறார். வியாழனால் பிரச்சினைகள் உருவாகலாம். விளையாட்டுக்குரிய ராசியான செவ்வாய் ஆதிக்க இடத்தில் இருக்கிறார். இதனால் பலசாதனைகள் நிகழ்த்துவார் என்று அந்தக் கணிப்புக் கூறுகின்றது.

# ஆஷஸ் கிண்ண டெஸ்ட் போட்டி தொடர் இங்கிலாந்தை வெல்வது சுலபமானதல்ல



புக்கானன்

எதிர்வரும் ஆஷஸ் கிண்ணத்துக்கான டெஸ்ட் தொடரில் இங்கிலாந்து அணியை வெல்வது சுலபமான காரியமாக இருக்காது என அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி பயிற்றுநர் ஜோன் புக்கானன் தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலியா அணி இங்கிலாந்து புறப்படுமுன் பிரிஸ்பேனில் நடைபெற்ற முன்னேற்பாட்டு நிகழ்வொன்றில் அவர் மேலும் தெரிவிக்கும் போது அணியின் பின் வரிசை துடுப்பாட்ட வீரர்கள் சவாலை எதிர்கொள்ளும் நிலையில் இருப்பதைக் காணக் கூடியதாக இருப்பதாகவும் அதனையே தாம் எதிர்பார்ப்பதாகவும கூறியதுடன், இரு அணிகளிலும் தரமான வீரர்கள் இருப்பதால் போட்டி மிகவும் விறு விறுப்பாக அமையும் என்றும் தெரிவித்தார்.

அண்மையில் இங்கிலாந்து - பங்களாதேஷ் அணியுடனான போட்டியில் 50 ஆவது வெற்றியைப் பெற்றுள்ளனர். அவர்கள் தென்னாபிரிக்க, நியூசிலாந்து அணிகளையும் வெற்றி கொண்டுள்ளனர் என புக்கானன் தெரிவித்துள்ளார். அத்துடன் மைக்கல வோனின் தலைமைத் துவத்தைப் பாராட்டியுள்ளார். அத்துடன் சகல துறை வீரரான பிளின்டொப் அவுஸ்திரேலிய அணிக்கு துடுப்பாட்டத்திலும், பந்து வீச்சிலும் நல்ல பதிலளிப்பார் என்றும தெரிவித்தார் அடுத்தமாத நடுப்பகுதியில அவுஸ்திரேலியஅணி இங்கிலாந்துடனான போட்டிகளில் பங்கேற்க விருக்கிறது.




# சக வீரர்களுடன் மோதலில் ஈடுபட்டால் கடும் நடவடிக்கை-கிரிக்கெட் சபை எச்சரிக்கை



சக வீரர்களுடன் மோதல் போக்கை கடைப்பபிடிக்கும் பாகிஸ்தான் அணி வீரர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அந்நாட்டு கிரிக்கெட்சபை எச்சரிக்கை விடுத்துள்ளது.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணி மேற்கிந்தியத்தீவில் சுற்றுப் பயணம் செய்து விளையாடி வருகிறது. இரு அணிகள் இடையேயான மூன்று ஒரு நாள் போட்டி தொடரில் மூன்று போட்டியிலும் பாகிஸ்தான் வெற்றி பெற்றது.

இரு அணிகள் இடையேயான இரண்டு டெஸ்ட்போட்டித் தொடரில் 276 ஓட்ட வித்தியாசத்தில் பாகிஸ்தான் தோல்வி கண்டது. இந்த நிலையில் பாகிஸ்தான் அணி வீரர்கள் இடையே கருத்து மோதல் ஏற்பட்ட விடயம் வெளியானது. தற்காலிக தலைவர் யுனிஸ்கானுடன் அதிரடி ஆட்டக்காரர் சயித் அப்ரிடி, சகல துறை வீரர் அப்துல் ரசாக் ஆகியோர் வாய்த்தகராற்றில் ஈடுபட்ட விவகாரம் வெளிச்சத்துக்கு வந்தது.இந்தப் பிரச்சினை பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் தீவிர பரிசீலனையில் உள்ளது. இது தொடர்பாக பாகிஸ்தான் கிரிக்கெட்சபை இயக்குநர் அப்பாஸ் சய்த் கூறியதாவது:,

முதல் டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் தற்காலிக தலைவர் யுனிஸ்கான் மற்றும், அப்ரிடி, இன்சமாம் உல்-ஹக் இடையே மோதல் ஏற்பட்டது. அணிக்கும். நாட்டு மதிப்புக்கும் நல்லதல்ல. இந்த விவகாரத்தில் பாகிஸ்தான் சபை கடும் நடவடிக்கை எடுக்க பரிசீலித்து வருகிறது.

பாகிஸ்தான் அணி வீரர்கள் ஒருவரை ஒருவர் கோபத்தில் முறைத்தாலோ அல்லது திட்டினாலோ தீவிர நடவடிக்கை எடுக்கப்படும் .சபைத்தலைவர் ஷரியர்கான் அப்ரிடி, இன்சமாம், யுனிஸ்கான் ஆகியோருடன் தொலைபேசியில் பேசி இருக்கிறார். இந்தபிரச்சினை தீர்க்கப்படும்.

மேற்கிந்தியத்தீவு பயணம் முடிந்ததும் அளிக்கப்படும் அறிக்கையை வைத்து ஒழுங்கு நடவடிக்கை குழு பரிசீலித்து நடவடிக்கைக்கு பரிந்துரைக்கும் இவ்வாறு அவர் கூறினார்.

# டெவன்போர்ட் அதிர்ச்சித் தோல்வி



பிரான்சில் நடைபெறும் பிரெஞ் ஓபன் டென்னிஸ் போட்டியில் பெண்கள் பிரிவு காலிறுதிப் போட்டியில் முதல்தர வீராங்கனையான லின்சே டெவன் போர்ட்டை பிரான்ஸ் வீராங்கனையான மேரி பியர்ஸ் 6-3, 6-2, என்ற செட் கணக்கில் வென்று அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார். இவர் 11 வருடங்களுக்கு முன்பு இத் தொடரில் இறுதிப் போட்டிவரை முன்னேறியதுடன் 2000 ஆம் ஆண்டில் கிண்ணத்தைக் கைப்பற்றியவர் என்பது நோக்கத்தக்கது.

தரவரிசையில் 21 ஆவது இடத்திலுள்ள இவர் அடுத்த சுற்றில் ரஷ்யாவின் எலினா லிக்கவ்ட் செலாவை எதிர்த்து ஆடுவார். 16 ஆவது இடத்திலுள்ள எலினா 15 வயது செசில் கரடன் செவாவை 2-6,6-4,6-4,என்ற செட்டில் வென்றுள்ளார். இத்தொடரில் டெவன் போர்ட், சரபோவா ஆகியோர் தோல்வியடைந்தனர். நட்சத்திர வீராங்கனை வீனஸ் வில்லியம்சை வென்ற போதிலும் 15 வயது கரடன் செவாவினால் லிக்கவ்ட்ஸ்வாவை வெல்ல முடியாது விட்டது.

# பிரெஞ் ஓப்பன் டென்னிஸ் ஷரபோவாவை வீழ்த்தினார் ஹெனின்



பிரேஞ்ஓப்பன் டென்னிஸ் போட்டியில் மரிய ஷரபோவாவை வீழ்த்தி ஜஸ்டின் ஹெனின் அரையிறுதிக்கு தகுதி பெற்றுள்ளார். நேற்று முன்தினம் மகளிர் பிரிவு கால் இறுதி ஆட்டம் ஒன்றில் பெல்ஜிய வீராங்கனை ஜஸ்டின் ஹெனின் ரஷ்யாவின் கவர்ச்சி வீராங்கனை மரிய ஷரபோவா ஆகியோர் மோதினர்.

இதில் ஜஸ்டின் ஹெனின் 6-4,6-2 என்ற நேர்செட் கணக்கில் அபாராமாக வெற்றி பெற்றார். இவர் உலக தரவரிசையில் பத்தாவது இடம் வகிப்பவர். ஏற்கனவே ஒரு முறை பிரெஞ் ஓப்பன்டென்னிஸ் சம்பியன் பட்டத்தை வென்றவர்.

# மாணவர் எழுச்சி நாளை முன்னிட்டு சைக்கிள் ஓட்டப்போட்டி முடிவுகள்

தமிழீழ மாணவர் எழுச்சி, நாளை முன்னிட்டு தமிழீழ மாணவர் அமைப்பினரும், தமிழீழ விளையாட்டுத்துறையினரும், கிளி. வலையக் கல்விப்பணிமனையினரும் இணைந்து நடத்தும் பாடசாலை மாணவர்களுக்கான சைக்கிள் ஓட்டப்போட்டி நிகழ்வு நேற்று நடை பெற்றது.

நேற்றுக் காலை 6.40 மணிக்கு புதுக்குடியிருப்பு சந்தியில் இருந்து ஆரம்பமான போட்டியில் 35 இற்கும் அதிகமான போட்டியாளர்கள் கலந்து கொண்டனர். புதுக்குடியிருப்பில் ஆரம்பமான போட்டி பரந்தன் - புதுக்குடியிருப்பு வீதிவழியாக கிளி.மத்தியவிளையாட்டு மைதானத்தில் நிறைவடைந்தது.

போட்டி நிறைவிடத்தை இராமநாதபுரம் மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த அ.சசிக்குமார் ஒரு மணி 27 நிமிடத்தில் நிறைவு செய்து முதலாம் இடத்தைப் பெற்றார். இரண்டாம் இடத்தை திருவையாறு மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த சு.புஸ்பகாந்தன் பெற்றார். மூன்றாம் இடத்தை கிளி. மத்திய கல்லூரியைச் சேர்ந்த ப.கிறிஸ்ணறூபன் பெற்றுக் கொண்டார்.

நேற்றைய சைக்கிள் ஓட்டப் போட்டிகளுக்கான வீதி ஒழுங்கு நடவடிக்கைகளை தமிழீழ காவல்துறையின் வீதிப்போக்குவரத்துப் பிரிவினர் மேற்கொண்டிருந்தனர்.


இதேவேளை மாணவர் எழுச்சி நாளை முன்னிட்டு முல்லை. மாவட்ட மாணவர்களுக்கான சைக்கிள் ஓட்டப் போட்டி பரந்தன் சந்தியில் இருந்து காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகி புதுக்குடியிருப்பு சந்தியை சென்றடைந்து நிறைவு பெற்றது.

போட்டியாளர்களின் ஊக்கமும், உற்சாகமும், அதிகமாக இருந்ததாகவும், எதிர் காலத்தில் இத்தகைய போட்டிகள் நடத்தப்பட்டு வீரர்களின் திறனை அதிகரிக்க இருப்பதாகவும் நிகழ்வில் கலந்து கொண்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் கி. பாப்பா தெரிவித்தார். (லோ.தீ)






மாணவர் எழுசசிநாளை முன்னிட்டு பாடசாலை மாணவர்களுக்கிடையில் நடாத்தப்பட்ட சைக்கிள் ஓட்டப்போட்டியில் முதல் நான்கு இடங்களைப் பெற்றவர்களையும், போட்டி ஆரம்பமாவதையும், முதல் இடத்தை பெற்றவரையும் படங்களில்காணலாம்:- (லோ-தீ)



### சிந்தனைக்கு

அன்றுதொட்டு இன்றுவரை தமிழரின் போராட்டம் அறவழியைத் தழுவி நிற்கின்றது அகிம்சை வழியிலும் சரி, ஆயுத வடிவிலும் சரி, தமிழர் வரித்துக் கொண்ட போராட்டம் தர்மத்தின் நிமயத்தில் நெறிக்கப்பட்டிருககிறது இந்தத் தார்மீக அடிப்படையே எமது போராட்டத்தின் ஆன்மீக பலமாகவும் இருந்து வருகிறது.

தமிழீழ தேசியத் தலைவர்

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 02-06-2005

தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com

## மறுப்பு!

சிறிலங்காவிலுள்ள ஐ.நா சபைப் பிரதிநிதி மீது அரசு கடும் சீற்றம் கொண்டுள்ளது. அண்மையில் சிறிலங்காவிற்கு விஜயம் செய்த ஐ.நா வின் விசேட பிரதிநிதியான முன்னாள் அமெரிக்க சனாதிபதி பில்கிளிங்டன் தமிழர் புனர்வாழ்க்கழகப் பணிப்பாளர் கே.பி.றெஜி அவர்களைச் சந்திப்பதற்கு ஏற்பாடுகள் செய்தார் என்ற காரணத்தினாலேயே இச்சீற்றம் ஏற்பட்டுள்ளது.

இதற்கு முன்னதாக ஐ.நா.வின் செயலாளர் கொபிஅனானும் சிறிலங்காவிற்கு வந்திருந்தபோது அவரை தமிழர் புனர்வாழ்வுக் கழகப்பணிப்பாளர் கே.பி.றெஜி சந்தித்ததைத் தொடர்ந்து ஐ.நா.பிரதிநிதி மீது அரசாங்கம் கடும் சீற்றத்தை வெளியிட்டிருந்தது. இந்நிலையில் திரு.பில்கிளிங்டன் அவர்களின் சந்திப்பையடுத்து ஐ.நா தூதுவரை வெளியேற்றும் அளவுக்கு சிறிலங்கா அரசாங்கம் கடுப்பாகியுள்ளது.

சிறிலங்கா அரசாங்கத்தைப் பொறுத்து மனித உரிமை அமைப்புக்கள் உட்பட சர்வதேச அமைப்புக்கள் எவையுமே அரசின் செயற்பாடுகளைக் கண்டுகொள்ளவோ, கள யதார்த்தத்தைப் பேசவோ கூடாது. அவ்வாறு பேசுவார்களேயானால் அரசாங்கத்தின் கடும் கண்டனத்திற்குள்ளாக வேண்டியதாக இருக்கும்.

இந்த வகையில் அண்மையில் உலகவங்கியின் வதிவிடப் பிரதிநிதி மீது சிறிலங்கா அரசும், பௌத்தசிங்களப் பேரினவாத அமைப்புக்களும் கடும் சீற்றத்தை வெளிப்படுத்தியிருந்தன. இலங்கைத்தீவில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதி அங்கீகாரம் பெறப்படாத தனி அரசு போன்று இயங்குவதாகக் கூறியதே அவர் மீதான சீற்றத்திற்குக் காரணமாக இருந்தது.

இதன் காரணமாக வெள்ளைப்புலி என -அவரைச் சித்தரிக்கும் அளவிற்குப் பௌத்த சிங்களப் பேரினவாத அமைப்புக்கள் முன்னேறிச் சென்றன. இத்தனைக்கும் அவர் கூறியதில் தவறு என்ன?. இலங்கைத்தீவில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் தனி அரசு ஒன்று இயங்குவது வெளிப்படையானது. அத்தோடு இலங்கைத்தீவில் இரு இராணுவங்களின் கட்டுப்பாட்டுப் பகுதிகள் உண்டு என்பதை ஏற்றுக்கொண்டே புரிந்துணர்வு உடன்பாடு செய்துகொள்ளப்பட்டது. இதற்குச் சர்வதேச மத்தியஸ்து வமும் உண்டு.

இதனையே உலக வங்கியின் பிரதிநிதி கூறினார் என்பதற்காக அவர் மீது பெரும் கண்டனங்கள் தொடுக்கப்பட்டன. இதை ஒத்ததாகவே தற்பொழுது யதார்த்த சூழ்நிலைக்கு ஏற்ப நடவடிக்கைகளை மேற்கொண்டார். இதற்காக ஏன் ஐ.நா.சபை பிரதிநிதிமீதும் சிறிலங்கா அரசாங்கம் சினம் கொள்ளவேண்டும்?

ஐ.நா செயலாளர் கொபிஅனானையோ, விசேடதூதுவர் பில்கிளிங்டன் அவர்களையோ தமிழர் புனர்வாழ்வுக்கழகப்

பொறுப்பாளர் கே.பி.றெஜி அவர்கள் சந்திப்பதற்கு ஏற்பாடு செய்தமைக்கு ஐ.நா பிரதிநிதி தன்நிலை விளக்கம் ஒன்றை அளித்துள்ளார். இதில் ஒன்று தமிழர் புனர்வாழ்வுக்கழகம் சிறிலங்கா அரசில் பதிவு செய்யப்பட்ட, அங்கீகரிக்கப்பட்ட அரசசார்பற்ற நிறுவனம் என்பது. இரண்டாவது. சுனாமி அனர்த்தத்தின் பின்னர் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் துரித பணியானது சர்வதேச ரீதியில் பாராட்டுதலைப் பெற்றுள்ளது என்பது.

ஐ.நா பிரதிநிதியின் இவ்விளக்கமானது சிறிலங்கா அரசாங்கத்தின் சீற்றத்திற்கான காரணத்தில் அர்த்தமில்லை என்பதைத் தெளிவாகவே வெளிக்காட்டுகின்றது. அதாவது அரசின் அங்கீகாரம் பெற்ற அதாவது சட்டவிரோமற்ற அமைப்பு ஒன்றினைச் சந்திப்பிற்கே தான் ஏற்பாடு செய்ததாக அது அமைகின்றது.

அடுத்ததாக ஐ.நா செயலாளரும், அதன்விசேட பிரதிநிதியும் சறிலங்காவிற்கு விஜயம் செய்ததன் நோக்கமானது சுனாமி அனர்த்தத்தினால் ஏற்பட்ட அழிவுகளைப் பார்வையிடவும் புனர்வாழ்வு, நிர்மாணப் பணிகள் தொடர்பாக ஆராய்வதற்குமே ஆகும். ஆகையினால் இப்பணியில் தொடர்புடையவர்கள் அதில் சிறப்பாகப் பணியாற்றுபவர்களை அவர்கள் சந்திக்கவேண்டியது அவசியமே.

ஆனால் சிறிலங்கா அரசின் பார்வையில் அவை எல்லாம் பொருத்தமான காரணியாக ஏற்கப்படப்போவதில்லை. ஏனெனில் அவர்களைப் பொறுத்து தமிழர் புனர்வாழ்வுக்கழகம் தமிழ் மக்களின் துயர் துடைப்பில் ஈடுபட்டிருப்பது அவர்களுக்குப் பெரும் சினத்தைக் கொடுப்பதாகவுள்ளது. அதற்கும் அப்பால் அவ்வமைப்பு சர்வதேச அங்கீகாரத்தைப் பெறுதல் என்பது அவர்களின் விருப்பிற்கு மாறானதாகும்.

ஆனால் ஒன்று சிறிலங்கா அரசாங்கம் சர்வதேச அமைப்புக்களின் பிரதிநிதிகளையோ, தூதுவர்களையோ கண்டிப்பதனாலோ, வெளியேற்றுவதனாலோ யதார்த்தநிலையை வெளியுலகம் அறியாமல் தடுத்துவிடமுடியாது. சிறிது காலம்தாழ்த்தியாயினும் யதார்த்தநிலை வெளிவரவே செய்யும்.

கடந்த காலத்தில் விடுதலைப்புலிகள் அமைப்பிற்கு எதிராக சிறலங்கா அரசாங்கம் சர்வதேச ரீதியில் மேற்கொண்ட பாரிய பிரசார நடவடிக்கையை களயதார்த்தம் மாற்றியமைத்தது போலவும்- சிறிலங்கா அரசாங்கம் பேச்சளவில் மறுத்தாலும் இலங்கையில் இரு இராணுவங்கள், இரு நிர்வாகங்கள் பேன்றவற்றை நடைமுறையில் ஏற்றுக்கொள்ள வேண்டிவந்துள்ளது போலவும் எதிர்காலத்தில் சர்வதேசத்தின் முன் பல விடயங்களை ஏற்றுக்கொள்ளவும் அங்கீகரிக்கவேண்டியும் வருவது தவிர்க்க முடியாததாகவே இருக்கும்.

# கொல்லப்பட்ட முத்தலிப்பின் பாதுகாவலர்களுக்கு ஒரேநாளில் விடுமுறை வழங்கப்பட்டது ஏன்?

### சிறிலங்காப்பொலிஸ் தீவிரவிசாரணை

லெப்.கேணல் துவான் நிசாம் முத்தலிப் சுட்டுக்கொல்லப்பட்ட நேற்று முன்தினம் அவருக்கு வழங்கப்பட்டிருந்த விசேட பாதுகாப்புக்கள் எதுவும் இருக்கவில்லை என பொலிசார் மேற்கொண்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

பாதுகாப்பு படையினர் அனைவருக்கும் ஒரேநாளில் விடுப்பு ஏன் அளிக்கப்பட்டது என்பது குறித்தும் பொலிசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

ஏனைய தினங்களில் முத்தலிப் பயணம் செய்யும்போது அவரின் பாதுகாப்பிற்கென ஆயுதமேந்திய இராணுவத்தினரும், சிவில் உடையணிந்த படையினரும் உந்துருளியில் அவருடன் பயணம் செய்வார்கள். எனினும் நேற்று முன்தினம் அந்தப் பாதுகாப்புக் குழு அவருடன் பயணம் செய்யவில்லை.

அவரது பாதுகாப்புக் குழுவினர் இல்லாததை துப்பாக்கிதாரிகள் ஏற்கனவே அறிந்து வைத்திருந்து இந்தத் தாக்குதலை நடத்தியிருக்கலாம் எனப் பொலிசார் சந்தேகம் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக சிறிலங்கா இராணுவ அதிகாரி ஒருவர் கருத்து தெரிவித்த போது, வழமையாக முத்தலிப்பின் பாதுகாப்பிற்கென செல்லும் இராணுவத்தினர் விளக்கு சமிக்ஞைகளுக்கு அருகே அவருக்கு விசேட பாதுகாப்பினை வழங்குவார்கள் எனக் கூறினார்.எனினும் நேற்றுமுன்தினம் அவரின் பாதுகாப்பிற்கென நியமிக்கப்பட்டிருக்கும் அனைத்துப் படையினரும் விடுமுறையில் சென்றிருந்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

# ரணில் நாட்டை தாரைவார்த்தமையை தற்போதைய அரசும் தொடர்கின்றது

### -ஜே.வி.பி யின் பிரச்சார செயலாளர் விமல்வீரவன்ச கூறுகின்றார்

ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கம் நாட்டை தாரைவார்த்தமையை நடைமுறை அரசாங்கம் தொடர்ந்தும் மேற்கொள்கின்றது என தேசப்பற்றுள்ள தேசிய இயக்க இணைத் தலைவரும், ஜே.வி.பியின் பிரச்சார செயலாளருமான விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.நேற்று கொழும்பில் நடைபெற்ற ஊடக மாநாட்டில் உரையாற்றிய விமல்வீரவன்ச மேலும் தெரிவிக்கையில்;

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாக செயற்படுவோர் அனைவரும் மேஜர் முத்தலிப்பின் கொலைக்கு பொறுப்பேற்கவேண்டும் எனத் தெரிவித்தார்.

கருணாகுழுவுக்கு இராணுவம் ஆதரவளித்து வருவதாக எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்து வருகின்றமையானது நாட்டின் பாரிய பிரச்சினைக்கு வழிவகுத்துள்ளது.

அவ்வாறு இராணுவம் கருணா குழுவுக்கு ஆதரவு வழங்குகிறது என்பது கற்பனைக்கதையாகும். இந்த நிலையில் நாட்டின் தலைவர் ஒருவர் இவ்வாறு கருத்துரைப்பது ஆபத்தான விடயமாகுமென விமல் வீரவன்ச தெரிவித்தார்.

இங்கு எல்லே குணவன்ச தேரர் கருத்து வெளியிடுகையில்; பொதுக் கட்டமைப்பை பொறுத்தவரையில் தாம் கடுமையான எதிர்ப்பை தெரிவிப்பதாகக் கூறினார்.இந்த நிலையில் எஞ்சியிருக்கும் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளையாவது பாதுக்காக்குமாறு அவர் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்தார்.

இவ்வாறு கொலை செய்யப்படுபவர்கள் தமிழர்களாகவோ அல்லது முஸ்லிமாகவோ இருந்தாலும் அவர்கள் சிறிலங்கா இராணுவத்துக்காக பாடுபட்டவர்கள் எனத் தேரர் குறிப்பிட்டார்.

எனவே உடனடியாக அனைத்து புலனாய்வுத்துறையைச் சேர்ந்தவர்களையும் பாதுகாக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனக் குறிப்பிட்ட அவர் அல்லது குறிப்பிட்ட புலனாய்வுப் பிரிவினர் பரிந்துரைப்பதன் அடிப்படையில் அவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டுமென எல்லே குணவன்ச கேட்டுக் கொண்டார்.

# கல்வியமைச்சரின் செயலரை சந்திக்க தொண்டர் ஆசிரியர்களுக்கு வாய்ப்பு

மத்திய மாகாண தொண்டர் ஆசிரியர் சங்கத்தினர்களின் கோரிக்கைகளுக்கு அமைய கல்வி அமைச்சின் செயலரை சந்திக்க வாய்ப்பைப் பெற்றுத் தருவதாக மத்திய மாகாண முதலமைச்சர் உறுதியளித்துள்ளார்.முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க நேற்று தம்மைச் சந்தித்த தொண்டர் ஆசிரியர் சங்க பிரதிநிதிகளிடம் இந்த உறுதியை வழங்கினார்.மத்திய மாகாணத்தில் கண்டி, மாத்தளை மற்றும் நுவரெலிய மாவட்டங்களின் சுமார் 300 தொண்டர் ஆசிரியர்கள் முதலமைச்சரின் அலுவலகத்தின் முன்னால் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர்.

இதனையடுத்தே முதலமைச்சருக்கும், தொண்டர் ஆசிரியர்களுக்கும் இடையிலான சந்திப்பு இடம்பெற்றது.

# பட்டதாரிகள் நிரந்தரமாக்கலை இழுத்தடித்தால் அரசிற்கெதிராகப் போராட நடவடிக்கை

### — வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

தற்பொழுது அரசாங்க சேவையில் இணைத்துக்கொள்ளப்பட்டு அரச கூட்டுத்தாபனங்களில் தற்காலிக சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருக்கும் சகல பட்டதாரிகளையும் நிரந்தரமாக்குவதில் அரசு மேலும் தாமதப்படுத்துமானால் அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள் நடத்துவதற்கு வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் முயற்சித்து வருகின்றது.

இது சம்பந்தமாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி பாராளுமன்றக் குழுத்தலைவர் நந்தன குணதிலகவிற்கும், செயலளார் சுசில் பிரேமஜயந்தவிற்கும் நேற்று முன்தினம் கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. அரச சேவையில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ள பட்டதாரிகள் 2005 ஆம் ஆண்டு ஜூன் மாதம் நிரந்தரமாக்குவதற்கு பிரதிநிதி அமைச்சர் தலைமையின் கீழ் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் அரசு இதுவரை எந்தத் தீர்மானமும் மேற்கொள்ளாதபடியால் இத்தீர்மானத்தை மேற்கொள்ளப்போவதாக வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

# வவுனியா வளாக மாணவர்கள் இரண்டாம் நாளாகப் போராட்டம்

(செட்டிகுளம்)

யாழ். பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாக மாணவர்கள் நேற்று இரண்டாவது நாளாகவும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

மாணவர்கள் போராட்டத்தில் ஈடுப்பட்டு இருப்பதன் காரணமாக கல்வி சாரா ஊழியர்கள் தமது பாதுகாப்பை நிர்வாகம் உறுதி செய்யவில்லை என்று தெரிவித்து அவர்களும் வேலைக்கு சமூகம் தராமல் வீதியில் நின்றனர்.

மாணவர்கள் தமது கோரிக்கைக்கு சாதகமான முடிவு கிடைக்கும் வரையில் போராட்டத்தில் ஈடுபடப் போவதாகத் தெரிவித்துள்ளனர்.கடந்த முறை மாணவர்கள் போராட்டம் நடத்திய போது கல்விசாரா ஊழியர்களை பூங்காவீதியில் உள்ள காரியாலயத்தில் வைத்து பூட்டினார்கள். இதன் காரணமாக இம்முறையும் மாணவர்கள் அவ்வாறு நடந்து கொள்வார்கள் என்ற பயம் காரணமாகவே கல்வி சாரா ஊழியர்கள் தமது பணிக்குச் செல்லவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

மாணவர்களின் பிரச்சினை தொடர்பாக ஆராய வன்னி பாராளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோர் நிருவாகத்துடன் பேசிய போதிலும் இதுவரை போராட்டம் முடிவுக்கு வரவில்லை.

(21)

# ஐ.தே.கவில் இணைய விருப்பம்

(கொழும்பு)

கண்டி மாவட்ட சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் ஆறு அமைப்பாளர்களும் மற்றும் மத்திய மாகாண சபைக்குத் தெரிவு செய்யப்பட்ட நான்கு மாகாணசபை உறுப்பினர்களும் ஐக்கிய தேசியக்கட்சியுடன் இணைந்து கொள்வதற்கு விருப்பம் தெரிவித்துள்ளார்கள் என ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிச் செயலாளர் திஸ்ச அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

தற்பொழுது அரசாங்கம் ஆட்சி நடத்துகின்றபடியால் கட்சி ஆதரவாளர்களுக்கு எந்தப் பதவிகளும் வழங்காதபடியால் விரக்தியுற்ற அவர்கள் ஐக்கிய தேசியக்கட்சியில் இணைந்து கொள்ளப்போவதாகத் தெரிவித்துள்ளனர்.

# எம் மண்ணில் சுதந்திரமாக வாழ வேண்டுமென்றால்
# பிரிந்து செல்வதைத்தவிர வேறு வழியில்லை!

## சமகால கருத்தரங்கில் கிளி.அரசியல்துறைப் பொறுப்பாளர்

(அலுவலக செய்தியாளர்)

"பலமானவர்களை அரவணைப்பதும் "பலவீனமானவர்களை அவமதிப்பதும்" இன்றைய உலக நியதி.

இன்று தனது தீர்க்க சிந்தனையின் மூலம் தமிழனை தார்மீக பலத்துடன் தலைநிமிரவைத்தவர் தேசியத் தலைவர் அவர்களே.

இவ்வாறு நேற்றுப் பிற்பகல் கண்டாவளை பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்ற சமகால அரசியல் கருத்தரங்கில் கலந்து கொண்ட கிளி. மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் கலைவாணன் உரைநிகழ்த்துகையில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், எமதுதேசியத்தலைவரின் தீர்க்கதரிசன செயற்பாட்டின் மூலம் சர்வதேச சமூகத்தின் முன் சிங்கள அரசின் நயவஞ்சக செயற்பாடுகள் யாவும் வெளிக் கொணரப்பட்டுள்ளதுடன், சிறிலங்கா அரசின் கபட நாடகத்தினை சர்வதேசத்திற்கும்புரியவைத் துள்ளது. இதன் காரணமாக சிறிலங்கா அரசு இன்று செய்வதறியாது திணறுவதைக் காணக்கூடியதாகவுள்ளது.

நாம் பலமான நிலையிலுள்ளோம் சர்வதேசம் இன்று எமக்கு ஏற்பட்டுள்ள அவலநிலையினை வெட்ட வெளிச்சமாகப் புரிந்து கொண்டுள்ளது.

நாம் எமது மண்ணில் சுதந்திர புருசர்களாக வாழவேண்டுமெனில் அரசுடன் இணைந்து வாழாது பிரிந்து சென்று வாழ்வதைத் தவிர வேறு வழியில்லை.எனவே தன்மானத் தமிழன் என்பதை நிருபிக்க வேண்டிய காலம் எமது காலடிக்குள் வந்துவிட்டது. அதனைத் தேசியத்தலைவரின் கரங்களைப் பலப்படுத்தி அவரின் காலத்தில் எமதுசுதந்திரத்தினைப் பெற்றுக் கொள்ள இன்றே திடசங்கற்பம் பூணுவோம் என்று தெரிவித்தார்.

நேற்றுப் பிற்பகல் 2.00 மணிக்கு கண்டாவளை பிரதேசசெயலக நிர்வாக உத்தியோகத்தர் பத்ம நாதன் தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் ஈழநாதம் பொறுப்பாளர் சுடர்மணி, கிளி.மாவட்டதேசிய எழுச்சிப் பேரவை செயலர் சு.பசுபதிப் பிள்ளை ஆகியோர்கலந்துகருத்துரை வழங்கினர். (சோ)

# வடமராட்சி கிழக்கில் பாதிப்புற்றோருக்கு
# மீன்பிடி உபகரணங்கள் கையளிப்பு

வடமராட்சி கிழக்கில் சுனாமிப் பேரலை அனர்த்தத்தினால் அனைத்துத் தொழில் உபகரணங்களையும் இழந்த மக்களுக்குத் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் சுனாமிக்குப்பின்னரான துரித புனர்வாழ்வு அபிவிருத்திச்சேவை நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் நேற்று முற்பகல் 10.30 மணியளவில் இரண்டாம் கட்டமாக மற்றுமொரு தொகுதி கடற்றொழில் உபகரணங்கள் கையளிக்கப்படடுள்ளன.



ஜேர்மன் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் நிதிப் பங்களிப்புடன் வழங்கப்பட்ட நேற்றைய இந்த மீன்பிடி உபகரணங்கள் கையளிக்கும் நிகழ்வானது வடமராட்சி கிழக்கு அபிவிருத்திப் புனர்வாழ்வு நிறுவனத்தின் இணைப்பாளர் சிவஞானம் தலைமையில் இடம்பெற்றது.

ஆரம்பநிகழ்வைத் தொடர்ந்து தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கே.பி.றெஜி, அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ. தங்கன் ஆகியோர் சிறப்புரைகளையாற்றியிருந்தனர். இதனையடுத்து வைபவரீதியாக படகுகள், இயந்திரங்கள், வலைகள் உட்பட மீன்பிடி உப கரணங்கள் பாதிக்கப்பட்ட மக்களிடம் கையளிக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் ஜேர்மன் கிளைப் பணிப்பாளர் சண்முகரட்ணம் உட்பட பெருமளவானோர் கலந்து சிறப்பித்தனர்

### ஓமந்தைப்...

யமாக இருக்கின்ற இந்துப் பிள்ளையார் கோவில் வளவினுள் புத்தர் சிலை வைக்கப்பட்டமை தொடர்பாக செய்திகள் வெளியானதைத் தொடர்ந்து நேற்று அப்பகுதிக்குச் சென்ற சிறிலங்கா இராணுவப்புலனாய்வுத் துறையினர் அப்பகுதி மக்களிடம் விசாரணைகளை மேற்கொண்டனர்.

இது தொடர்பாகவன்னிப்பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு தகவல் கொடுக்கப்பட்டதை அடுத்து வன்னி பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சிவசக்தி ஆனந்தன், சிவநாதன் கிஷோர் வவுனியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஏ.எம்.சி அபேசிங்க பண்டார வவுனியா மாவட்ட துணை அரசியல்துறைபொறுப்பாளர் தர்மேந்திரா ஆகியோர் சென்று புத்தர்சிலை அமைந்துள்ள இடம் தொடர்பாகவும், புத்தர்சிலை தொடர்பாகவும் ஆராய்ந்தனர் இதனை அடுத்து அங்கு இருந்து வன்னிப் பாராளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோர் தொலைபேசியின் ஊடாக வன்னி இராணுவ அதிகாரி ஒருவருடன் இது தொடர்பாகக் கதைத்தார். இந்து ஆலயத்தின் வளவில் மேற்படி சிலை அமைந்திருப்பது தொடர்பாக தெரிவித்ததையடுத்து தாம் இந்தச் சிலையினை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக இராணுவ அதிகாரியும், வன்னி பாராளுமன்ற உறுப்பினர்களுடன் சென்று இருந்த வவுனியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியும் ஒப்புக்கொண்டுள்ளனர்.

இதேவேளை வவுனியா அரசியல் துறைபொறுப்பாளர் ஞானத்திற்கும் வவுனியா போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருக்கும் இடையில் நடைபெற்ற முதல்சந்திப்பில் புத்தர்சிலை தொடர்பாக முறைப்பாடு தெரிவித்ததாகவும் இது தொடர்பாகத் தாங்கள் ஆராய்வதாகப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பிரதி நிதிகள் ஏற்று கொண்டதாக இந்த சந்திப்பில் கலந்து கொண்ட வவுனியா மாவட்ட துணைஅரசியல் துறைப் பொறுப்பாளர் தர்மேந்திரா தெரிவித்தார். (முன்னர் வந்தசெய்தி உள்ளே) (21)

# யாழ்.நகர மத்தியில் சிறிலங்கா படையினரால்
# தடைசெய்யப்பட்ட வீதிகளை திறக்க வற்புறுத்து

(வடமராட்சி)

யாழ்.நகரின் மத்தியில் படைத்தரப்பினால் பொதுமக்களது பயன்பாட்டிற்கென தடைசெய்யப்பட்டுள்ள பிரதான வீதிகளைத் திறந்து விடுமாறு யாழ்.மாவட்ட படைத்தலைமைக்கு தொடர்ச்சியான அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டு வருகின்றது.

குறிப்பாக யாழ்.நகரப்பகுதியில் நிலவிவரும் போக்குவரத்து நெருக்கடிகளைச் சீர்செய்வது தொடர்பாக ஆராய்வதற்கான விசேட மாநாடொன்று பொலிஸ் தரப்பினால் நேற்று கூட்டப்பட்டது. மாநகரசபையின் ஆணையாளர் போக்குவரத்து திணைக்கள அதி காரிகள் மற்றும் வீதி அபிவிருத்தித் திணைக்கள அதிகாரிகளென பல தரப்புகளும் கலந்து கொண்ட இச் சந்திப்பில் நகரப்பகுதியில் ஏற் பட்டுள்ள போக்குவரத்து நெருக் கடியினை சீர்செய்ய ஏதுவாகப் படையினரால் தடைசெய்யப்பட்டுள்ள மின்சார நிலைய வீதியினைத் திறந்து விடவேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பில் எதிர் வரும் 20ஆம்திகதி உரிய பதிலினை படைத்தரப்பிடம் பெற்றுக் தருவதாக உறுதியளித்துள்ள பொலிஸ் தலைமைபோக்குவரத்து நெருக்கடிகளை தவிர்ப்பதற்கான கூட்டத்தையும் அதுவரை பிற்போட்டுள்ளது.

இதனிடையே படையினரால் யாழ். நகரின் மத்தியில் தடைசெய்யப்பட்டுள்ள பிரதான வீதிகள் மீளத் திறப்பதற்கான நடவடிக்கையினை மேற்கொள்ளவென ஐந்து பேர் கொண்ட குழுவொன்றை யாழ்.மாநகர சபை நிறுவியுள்ளது.

இக்குழுவும் யாழ்.மாவட்ட படைத் தலைமையிடம் குறித்த வீதியைத் திறந்து விடுமாறு நேரடியாகக் கோரியுள்ளது.

இதனிடையே 1995 ஆம் ஆண்டு யாழ்.குடாநாடு படையினரால் கைப்பற்றப்பட்டது முதல் யாழ்.நகரின் பிரதான மின்சாரநிலைய வீதி, மணிக்கூட்டு வீதி மற்றும் விக்டோரியா வீதிகளையும் அதனோடினைந்த ஞானம்ஸ் ஹோட்டல், சுபாஸ் ஹோட்டல் பகுதிகளையும் படைத்தரப்பு ஆக்கிரமித்துள்ளது. (27)

### படையினரின்...

முறையானது அப்பிரதேச மக்களுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று முன்தினம் வாகரைப் பிரதேச மக்கள் நடத்திய ஆர்ப்பாட்டத்தையடுத்து இந்த விடயத்தில் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் கவனம் திரும்பியுள்ளது. எதிர்வரும் செவ்வாய்க்கிழமை மாவட்ட செயலகத்தில் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு, அரசாங்க அதிபர் உட்பட சிவில் அதிகாரிகள் மற்றும் இராணுவ அதிகாரிகளுடன் கூடி இது குறித்து ஆராயவிருக்கின்றது. இதேவேளை இந்தக் கட்டுப்பாடுகள் எதுவும் சிவில் நிர்வாகம் ஊடாக அமுல்படுத்தப்படவில்லை என அரசாங்க அதிபர் வேல்முருகுசண்முகம் கண்காணிப்புக் குழுவிற்கு நேற்று விளக்கிக் கூறியுள்ளார்.

### அனர்த்தம்...

சினை இல்லை அரசின் கொள் கை என்ன என்பதிலேயே சிக்கல்கள் உள்ளன. இது குறித்து நாம் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஆலோசனைகளையும், யோசனைகளையும் அரசாங்கத்திற்கு எம்மால் வழங்க முடியும். எமக்குச் சரியாகத் தெரியாது இருப்பினும் சுனாமி கடல் அனர்த்தத்தினால் உயிரிழந்தவர்களில் ஏராளமானோர் கரையோரப் பிரதேசங்களிலேயே வாழ்ந்து வந்தனர். இதனால் மனிதாபிமான ரீதியில் எச்சரிக்கை கட்டமைப்பு ஒன்றை ஏற்படுத்தும் தேவை எழுந்துள்ளது என்றார் அவர்.

### பொதுக்கட்ட..

இத்தகைய பிரச்சினைகளுக்குத் தீர்வாக சனாதிபதித் தேர்தலை இந்த ஆண்டின் இறுதியிலேயே நடத்த வேண்டும் பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக அரசு வெறும் பேச்சளவிலே இருக்கிறதே தவிர சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பொது கட்டமைப்பில் கையெழுத்திடவில்லை என்றும் பீரிஸ் சாடினார்.

### இன்று...

மத்திய மகாவித்தியாலயத்தைச் சென்று நிறைவடையும். அங்கு மாணவர்களின் திறமையினை வெளிப்படுத்தும் நிகழ்வுகள் இடம்பெறுமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

கிளிநொச்சியில் இன்று காலை 10 மணிக்கு கிளிநொச்சி பொது மைதானத்தின் முன்பாக ஆரம்பமாகும் மாணவர்களின் எழுச்சிப் பேரணி கிளிநொச்சி சந்திரன் பூங்காவைச் சென்றடைந்து அங்கு எழுச்சி நிகழ்வுகளும். கலைநிகழ்வுகளும் இடம்பெறும்.இதேவேளை மாவட்ட ரீதியாக சகலதுறைகளிலும் முதலிடம் பெற்ற மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கவும் தமிழீழ மாணவர் அமைப்பினர் ஒழுங்கமைத்துள்ளனர்.

இதேபோன்று மல்லாவி பாண்டியன்குளம், ஒட்டுசுட்டான்,முள்ளியவளை, புதுக்குடியிருப்பு ஆகிய இடங்களிலும் மாணவர் எழுச்சிநாள் நிகழ்வுகள் சிறப்புற நடைபெற ஏற்பாடாகியுள்ளன. (33,41,21,10,ச,தீ)

### திருமலை...

குழுவைச் சந்தித்துப் பேசிய பின்னர் நடவடிக்கை எடுப்பார் என உறுதியளிக்கப்பட்டது.

நேற்று புதன்கிழமை பகல் திருகோணமலையிலுள்ள வடக்கு-கிழக்கு மாகாண ஆளுநரின் வாசஸ்தலத்தில் அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தலைமையிலான அரச மட்டக் குழுவினர் நடத்திய பேச்சுக்களின் பின்னர் மேற்கண்ட தகவல்கள் செய்தியாளர்களுக்கு வெளியிடப்பட்டன .

நேற்றைய சந்திப்பில் அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவுடன் பிரதி அமைச்சர் டிலான் பெரேரா, ஆளுநர் டிரோன் பெர்னாண்டோ, சனாதிபதியின் ஆலோசகர் ஹரிம்பீரீஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தமிழர் தரப்பில் திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்கள் இரா.சம்பந்தன், க.துரைரட்ணசிங்கம், திருகோணமலை மாவட்டத் தமிழ்மக்கள் பேரவையின் சார்பில் அதன் தலைவர் வ.விக்னேஸ்வரன்,எஸ். கௌரிமுகுந்தன், ஆர்.ஜெறோம், சிவன்கோயில் பிரதமகுரு ஸ்ரீபிரம்மஸ்ரீ விக்னேஸ்வரக்குருக்கள், உவர்மலை குழந்தை யேசு ஆலய பங்குத்தந்தை வணபிதா அன்னதாஸ் அடிகளார் ஆகியோர் பங்குபற்றினர். காலை 11 மணியளவில் ஆரம்பமான சந்திப்பு பிற்பகல் இரண்டு மணியளவில் முடிவடைந்தது. அதன் பின்னர் செய்தியாளர்கள் சந்திப்பு இடம்பெற்றது. எதிர்வரும் இரு வாரங்களில் புத்தர்சிலை விவகாரத்தில் சுமுகமான தீர்வு ஏற்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

"திருகோணமலை நகரில் தற்போது குவிக்கப்படடுள்ள இராணுவத்தினரை உடனடியாக அகற்ற வேண்டும் என்று தமிழர் தரப்பு அமைச்சர் குழுவினருடன் நடத்திய சந்திப்பில் வலியுறுத்தியது. கொழும்பு திரும்பியதும் அமைச்சர் குழு சனாதிபதியைச் சந்தித்து. இது குறித்து நடவடிக்கை எடுப்பதாக வாக்குறுதி அளித்துள்ளது. அளிக்கப்பட்ட வாக்குறுதிகளை அரசாங்கம் நிறைவேற்ற வேண்டும் என்பதே திருகோணமலை மாவட்ட தமிழ் மக்களின் எதிர்பார்ப்பாகும்"

இவ்வாறு திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன், அமைச்சர் குழுவினருடனான கலந்துரையாடலின் பின்னர் இடம்பெற்ற சந்திப்பில் தெரிவித்தார்.

செய்தியாளர் சந்திப்பில் முதலில் அமைச்சர் மைத்திரிபால சிறிசேன பேசினார். பின்னர் பாராளுமன்ற உறுப்பினர் சம்பந்தன் பேசினார். சம்பந்தன் கூறியதாவது "புத்தர்சிலைவிவகாரம் தொடர்பாக இரு வழக்குகள் திருகோணமலை நீதிமன்றத்தில் இருக்கின்றன. வழக்குகளில் நீதிமன்றங்கள் வழங்கிய கட்டளைகள் பற்றியும் அனைவருக்கும் தெரியும். புத்தர்சிலை தொடர்பாக நகர அபிவிருத்தி அதிகாரசபை சில நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டியுள்ளது. இது தொடர்பான சட்ட நடவடிக்கைகளை நகர அபிவிருத்தி அதிகாரசபை எடுக்கவிருக்கிறது. இன்னும் இரு தினங்களுக்குள் இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவிருப்பதாக அமைச்சர் குழு இன்றைய சந்திப்பில் பங்குபற்றிய தமிழர்தரப்பு பிரதிநிதிகளுக்கு உறுதிமொழி வழங்கியுள்ளது.

"இச்சந்திப்பில், திருகோணமலை நகரில் இராணுவம் பெரும் எண்ணிக்கையில் குவிக்கப்பட்டிருப்பதால் மக்களுக்கு ஏற்பட்டுள்ள அசௌகரியங்கள் மற்றும் வசதியீனங்கள் பற்றி தமிழர் தரப்பு பிரதிநிதிகள் அமைச்சர் மட்டக் குழுவினருக்குத் தெரிவித்தார்கள். உடனடியாகக் குவிக்கப்பட்ட இராணுவத்தினர் அகற்றப்பட வேண்டும் என்றும் தமிழர் தரப்பு வலியுறுத்தியது. கொழும்பு திரும்பியதும் சனாதிபதிக்கு இது குறித்து தெரிவிப்பதுடன் நடவடிக்கை எடுப்பதாகவும் அமைச்சர் மட்டக்குழு தமிழர் தரப்பு பிரதிநிதிகளுக்கு உறுதி வழங்கியுள்ளது. அமைச்சர் மட்டக்குழுவினர் வழங்கிய உறுதிமொழிகளை அரசாங்கம் நடைமுறைப்படுத்த வேண்டும் என்று தமிழ் மக்கள் எதிர்பார்க்கின்றார்கள் என்று பாராளுமன்ற உறுப்பினர் சம்பந்தன் தெரிவித்தார். (25)


## கண்ணீர் அஞ்சலி

அமரர்

கிருஷ்ணபிள்ளை இராசலிங்கம்



கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் கடமை புரிந்துகொண்டிருக்கும் எமது சகஊழியர் தடாதகைப் பிராட்டியின் அன்புக்கணவர் கிருஷ்ணபிள்ளை இராசலிங்கம் 31.05.2005 செவ்வாய்க்கிழமை காலமாகியுள்ளார். அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபம் தெரிவிப்பதோடு அவரின் ஆன்மா சாந்தியடையப்பிரார்த்திக்கின்றோம்.

மாவட்ட வைத்திய அதிகாரி
வைத்திய அதிகாரிகள்
உத்தியோகத்தர்கள்,
ஊழியர்கள்.

(சி.12031)


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு யூன் மாதம் 02 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது